Reg. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோன் னம்பலவன்
ஞானதரு வாணியைஉள் நாடு.



| | | |
|---|---|---|
| மலர் ௧௨ | வெகுதான்யஆண்டு மாசித்திங்கள்<br>1939ஞு பிப்ரவரிமீ | இதழ் ௨ |



## *தலைமையுரை

[திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை]

*என்னாலறியாப் பதந்தந்தாய், யானதறியாதே கெட்டேன்*
*உன்னாலொன்றுங் குறைவில்லை, உடையாயடிமைக் காரென்பேன்*
*பன்னாளுன்னைப் பணிந்தேத்தும் பழையவடியா ரொடுங்கூடா*
*தென்னாயகமே பிற்பட்டிங்கிருந்தே னோய்க்கு விருந்தாயே.*

**மாண்பிற் சிறந்த சைவப் பெரியீர்!**

சிவம் பெருக்கும் மக்கள் ஊழியமே தொண்டுகளிற் சிறந்ததெனும் குறிக்கோளுடன் இப்பேரவையின் உறுப்பினராயும், அன்பராயும் இருந்து அரை நூற்றாண்டின்

*இது தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் ஐம்பத்தைந்தாம் ஆண்டுவிழாப் பேரவையில் தலைமை வகித்த செந்தமிழ்ப் புலவர், தமிழவேள், திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் நிகழ்த்தியது.

மேலதாய்ப் புரிந்து வரும் உங்கள் அரிய செயல்களை உள மார்ந்த நன்றியுடன் போற்றுகின்றேன். சைவ சமயத்தின் பெற்றிமைகளையும், சைவசித்தாந்த நூல்களிற் காணப் பெறும் நுணுகிய கொள்கைகளையும் விளக்கி, என்போன்ற எளியரையும் தெருட்டித் தெள்ளிய ராக்கவல்ல சைவப் பேரவைகள் தென்னாட்டில் மிக மிக அருகிக் காணப்படுகின் றன. சில பேரவைகள் போற்றுவாரின்மையின் மறைந்து விட்டன. சில சபைகள், பெயரளவில் இருந்து வருகின் றன. சென்னையிலுள்ள சித்தாந்த மா சமாசம் புத்துயிர் பெற்று, வீறுடன் எழுந்து, சிவத்தொண்டு புரிந்து வருகின் றது; சைவ நன்மக்களின் எய்ப்பில் வைப்பாகிய தெய்வப் பனுவல்கள் அனைத்தையும் மலிந்த விலையிற் பதித்துத் தமிழ் நாடு முற்றும் சிவமணம் பெருகச் செய்துவருகின்றது. வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகத் தின் வடவெல்லையில் சென்னைச் சைவசித்தாந்த மா சமாச மும், தென்னெல்லையில் தூத்துக்குடி சைவசித்தாந்த சபை யும் நிலை நின்று நமது சமயத்தைக் காப்புச் செய்கின்றன. இறைவன் திருவருட்பாங்கால் இப்பேரவைகள் தழைத் தோங்கி, இவற்றின் கொள்கைகள் உலகெங்கும் பரவி வளர் தலாற் சிவப்பேறும், பேரின்பமும் மக்கள் எளிதே கைவரப் பெறுவாராக.

ஆனால், இக்கூறிய எல்லைகளின் இடைப்பட்ட விடங் களில் நமது சமயம் ஒளி மழுங்கவும் கலங்கரை விளக்கங் கள் போலவும், அருளாற்றல் நிலையங்களாகவும் நிறுவப் பெற்றுள்ள திருக்கோயில்கள் பொலிவிழக்கவும் காண்கின் றோம். முப்போதுந் திருமேனி தீண்டுவாரெனப் போற்றப் பெறும் ஆதி சைவக் குருக்கள் மரபினர் கல்வி நிரம்பாதும், செய்கருமத்தின் உயர்வை அறியாதும், தம்மைச் சுமார்த்த வேதியரின் இனத்தவரென நினைக்கின்றனர்; இதனால்

அடையும் இழிவையும் கருதினாரல்லர். தமிழையும் சைவத்தையும் தமது கண்ணெனப் போற்றி வளர்த்த முடியுடை வேந்தர்கள் ஒடுங்கிய பின்னர், இவற்றின் புகலிடமாய் விளங்கிய சைவத் திருமடங்கள் இற்றைநாளில் இன்பக் களரிகளாய் ஒடுக்கத்திலிருக்கின்றன. ஆதலால் ஏழை மக்கள் சைவத்திறம் யாதெனை அறிந்துகொள்ள வாய்ப்பில்லாது போயிற்று. சைவத்தின் அடிப்படையான கொள்கைகட்கு மாறான விதிகளும் வழக்கங்களும் சைவ சமயத்துள் நுழைந்து அதன் எழில்மேனியை மாசுபடச் செய்தன. 'சாதி' என்பதையும் சமயம் என்பதையும் பிரிக்க முடியாத வண்ணம் பிணைத்து, பிறப்பினால் உயர்வு தாழ்வுகளைக் கற்பித்து, சைவசமயச் சார்புடைய மக்களில் பெரும்பாலர் இழிந்த குலத்தினர் எனக் கருதச் செய்தது; சைவர்கள் எனத் தம்மைக் கூறவும் ஒருப்படாது, நமது சந்தானத் தலைவர்களையும், சமயத் தலைவர்களையும் தம்மைக் காக்கும் அருட்குரவர் எனக்கொள்ளாது 'மிண்டிய மாயாவாதமென்னும் சண்டமாருதம்' எனக் குறிக்கப்பெறும் சமயத் தலைவரே தமது ஞான குருவெனக் கொள்ளும் சுமார்த்தர்கட்குச் சைவத் திருக்கோயில்களில் ஏற்றமும் உரிமையுந் தரப்பெற்று ஏதங்கள் பல புரியப் பெறுகின்றன. சைவம் உளதோ இலதோ என்ற நிலைக்கு முன்னொருகால் வந்தபொழுது 'சொற்கோவும் தோணிபுரத்தோன்றலும், எம்சுந்தரனும், சிற்கோல வாதவூர்த்தேசிகனும் முற்கோலிவந்து' புத்துயிர் தந்து வாழ்வித்த தெய்வத் தமிழ்மறை இழிவு செய்யப்பெறுகிறது. வடமொழி வேதமானது ஆண்டவன் பூசனைக்குரிய பொற்கலமெனவும், தமிழ்மறைகள் ஈமக்கடனாற்றுதற்குரிய மட்கலமெனவும் தில்லை வீணாகிய 'பேர்கொண்ட பார்ப்பான்' தமிழ்மக்கள் முன்னிருந்து தருக்குடன் இழித்துக் கூறவும் துணிவுகொண்டான். என்னே ! நமது

ஏழைமை! சிவபெருமானுடைய இடபக் கொடியையும், முருகப்பிரானுடைய கோழிக்கொடியையும் திருக்கோயில்களினின்றும், திருத்தேர்களினின்றும் அகற்றவும், சமயக் குறிப்பு சிறிதுமில்லாத மற்றொரு கொடியை ஆண்டவனது முடிமேல் ஏற்றவும் நாம் பார்த்திருக்கின்றோம்! நமது சமயிகளாகிய பெரும் பகுதியினர் அடிமைப்பட்டும், ஒடுக்கப் பட்டும், இருக்கின்ற இழிநிலையை உணர்ந்து விடுதலைக்கு வழிதேடிப் பிற மதங்களைச் சார்வாராகின்றனர். ஆண்டு தோறும் பிறமதம் புகுவார் எத்தனைபேர் எனக்கருதினோ மில்லை! நம்மவர்களில் பூதி சாதனங்களை மதித்துப் போற்றுவோர் ஆயிரவரில் ஒருவர் உண்டா? சைவத் திருமுறைகளைப் பயிலுவோர் பதினாயிரவர்க்கு ஒருவருண்டா? நாளும் அல்லது கிழமைதோறும் கோயில் வழிபாடு செய்பவர் நூறாயிரவரில் ஒருவருண்டா? பிறசமயங்கட்குரிய தெய்வங்களை வணங்கியும், காணிக்கைகள் கொடுத்தும், நம்மவர் வரங்கள் கேட்பதும் பெருவழக்காகி வருவதை நாம் குறிப்பில் வைத்து அதனால் விளைவது யாதெனக் கருதுவதுண்டா?

“ கற்றைவார் சடையெம்மண்ணல் கண்ணுதல் பாதநண்ணி
மற்றுமோர் தெய்வந்தன்னை யுண்டென நினைந்தெம்பெம்மாற்
கற்றிலாதவரைக் கண்டாலம்ம நாமஞ்சு மாறே ”

“ செஞ்சவே யாண்டுகொண்டான் றிருமுண்டந் தீட்டமாட்டா
தஞ்சுவா ரவரைக் கண்டாலம்ம நாமஞ்சுமாறே. ”

என்ற மெய்யுரைகளை மனத்திலிருத்தி, சமய நெறிகளினின்றும் பிழைப்பவர்களை நன்னெறிக்கண் உய்க்க முயல்கின்றோமா? உலகாயதக் கொள்கைகளைக் கைக்கொண்டு சமய வாழ்க்கையே மக்களின் முன்னேற்றத்தைக் கெடுத்து அடிமை வாழ்வில் தாழ்த்துகின்றது என்றவாறெல்லாம்

தூற்றுபவர் நம்மவரா? பிற சமயத்தினரா? என உய்த்துணர்ந்து நோக்குங்கள். ஐயோ! பரிதாபம்! நமது சமய நிலை மிகமிக இரங்கற்பாலது!

இஃது இவ்வாறிருக்க, மற்றொரு சமயம் நமது நாடு நகரங்களில் நாளொருமேனியாய் வளர்ந்து வருவதை உன்னிப்பாருங்கள். அந்த சமயத் தலைவர்களின் உறுதிப்பாடும், தொண்டின் திறனும், உலைவிலா ஊக்கமும் பாராட்டற்பாலன. நீண்டகாலம் சமயநெறி பிறழாது பயிற்சி பெற்றும், கலை நூல்களை நுணுகி ஆராய்ந்தும், பணிவுடைமை (obedience) வறுமையுடைமை (poverty), நிறையுடைமை (chastity) எனப்படும் கோட்பாடுகளில் உறுதியுடைய குருமார்கள், மக்களின் ஊழியமே (Service of humanity) வாழ்க்கையின் குறிக்கோளாகக்கொண்டு ஆயிரக்கணக்கினர் வந்துகொண்டே இருக்கின்றனர்.

"உழுப்பின் வாரா உறுதிகள் உளவோ
கழப்பின் வாராக் கையறவுளவோ"

என்ற முதுமொழி, மெய்யுரை என இற்றைநாளிலும் காட்டுகின்றனர். இவர்களது வாழ்க்கையோ மிகமிக எளியது. தொடக்கக்கல்வி முதல் உயர்தரக் கல்விவரை வழங்குதற்கான கல்லூரிகள், தொழிற் கல்விக்கான நிலையங்கள் பலவற்றையும் நிறுவி, ஆண்கள், பெண்கள், வறியோர், இழிநிலைப்பட்டோர் அனைவரையும் உயர்நிலைக்கண் உய்க்கின்றனர். இங்ஙனமெல்லாம் சமயநெறி போதிக்கப்பெறுகின்றது. நம்மவர்கள் 'National', 'Hindu', 'ஆதீனம்', 'மகந்து' என்ற புனைபெயர்களுடன் நடத்திவரும் கலாசாலைகளையும் கிறித்தவக் கலாசாலைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.. உயர்தரக் கல்லூரிகளைச் சார்ந்து மாணவரில்லங்கள் அமைத்து மாணவர்களின் ஒழுக்கத்தைக் காத்து, கல்வியில் ஊக்கி, சமயநெறியில் நிறுத்தி வாழ்விக்கும்

அவர்தம் சிறப்பு மிகவும் போற்றத்தக்கது. கன்னிமாடங்களமைத்து, சமயத்தொண்டுகள் புரிதற்கான நெறிகளில் பெண்களைப் பயிற்றிப் பெண்மக்கள் நன்னிலை எய்தற்காம் வழிதுறைகளில் நடத்துகின்றனர். தொழுநோயர், கயநோயர், பெண்கள் ஆகியவர்களின் பிணிகளை நீக்குதற்குச் சிறந்த மருத்துவசாலைகள் அமைத்து நடத்துகின்றனர். இவற்றுள் பெண்களுக்கென நிறுவிய மருத்துவசாலைகளும் அவற்றின் நடப்பும் குறிப்பிடத்தக்கன. தலைமையில் இருக்கும் மருத்துவர் (Doctor) முதல் பணிப்பெண்வரை அனைவரும் பெண்மணிகள். இவர்கள் போதிய கல்வியும், நல்லொழுக்கமும், கடமை அறிந்து பணி செய்யும் திறனும் வாய்ந்தவர்கள். ஆயிரக்கணக்கினராகிய பெண் மக்கள் வறுமையினீங்கி மானத்துடன் வாழுதற்கான நிலைக்களமாவதே மருத்துவசாலையின் முதற்பயன். அரசியலாரின் மருத்துவசாலைகளில் நேர்மையற்ற பணியாளர்கள் நெருக்குவது போலாகாது நோயாளர் அன்புடன் பேணப்படுவது இரண்டாவது பயன். பிள்ளைப்பேற்றிற்காக இம்மருத்துவ சாலைகளை நாடுவோர் பலர். இவருள் பிறந்த பிள்ளையைச் சுமையாகக் கருதி அதனை விட்டொழிய விரும்பும் அன்னைமார் சிலர்; பிறந்த பிள்ளை பேணுவாரற்று, சார்பின்றிவாட இறந்துபடும் தாய்மாரும் சிலர். இவ்வாறாகத் துறக்கப்படும் பச்சிளங் குழவிகளை மருத்துவசாலையினர் அருளுடன் ஏற்றுத் தமது சமய நெறியில் வளர்த்து ஈடேற்றுகின்றனர். இத்தகைய ஆதுலசாலைகள் நமது சமயநெறிக்கண் உளவோவென நினைமின். நாளும் சமய போதகர்கள் நோயாளிகளை அணுகிச் சமயவுண்மைகளைக் கூறிவருகின்றனர். சமயநூற் பயிற்சியும், சமய ஒழுக்கமும், கோயில் வழிபாடும் அவர்களால் ஒவ்வொரு மக்களிடத்தும் வற்புறுத்தப்படுகின்றன. கொட்டு

முழக்கு, கூத்து முதலிய ஆரவாரங்களின்றிக் கோயில் வழி பாடு, அமைதியாய் நடைபெறுகின்றது. திருவிழா, பூசனை முதலியவற்றில் பெரும் பொருட் செலவுகிடையாது. பூசனை முடிந்ததும் வேத நூலிற்காணும் மெய்யுரை ஒன்றனைக் கொண்டு பாமரரும் உணர்வுபெறுமாறு விரிவுரை நிகழ்த்தப் பெறுகின்றது. சமயத்திற் பிறந்த ஒவ்வொரு மக்களும் தமது வேதநூல், தோத்திர நூல்களைப் பல்காலும் பயிலு தல் கடன் எனக்கொண்டிருக்கின்றனர்; துயிலெழும்போதும் துயிலப்போகு முன்னரும் இறைவனது நன்றிகளையும் அருட்டிறங்களையும் நினைந்து, நினைந்து, உணர்ந்து உணர்ந்து நெக்குடைந்து வாழ்த்தெடுக்கின்றனர். இவ்வாறாக நட மாடும் பரமற்கு இயற்றப்படும் அருளிப்பாடுகள் இறை வனுக்கு உவப்பைத் தருவனவல்லவோ ?

நமது நாட்டில் புதிதே குடிபுகுந்த சமயங்களைச் சார்ந் தோர், நமது சமயிகள் தானே? நமது சமயத்திலே தோன்றி, நமது சமயச்சூழலிலே வாழ்ந்து வந்த நன்மக்கள் " தூய நன்னெறி "யென யாம் பெருமிதம் பேசும் சமயத்தை வெறுத்தகன்று, நெறியல்லா நெறிகளென யாம் இழித் துரைக்கும் நெறிகளை நெறியாக நினைந்து சார்ந்ததன் நோக்க மென்னை ? என்று கருதி உண்மை காணவேண்டுவது நமது கடமையல்லவா ? நீலவானத்தினின்றும் பெய்கின்ற மழை நீர் மிகமிகத் தூய்மையும் விழுப்பமும் உடையது. நிலத் தைச் சார்ந்தவுடன் ஆங்குள்ள நிறங்குணமெல்லாவற்றை யும் உடன்கொண்டு நிலத்தியல்பால் நீர்திரிந்து, மாசுபட்டு ஒழுகும் நீரோட்டங்கள் கண்கூடல்லவா ? அதுபோலவே சைவத்திறத்தின் அடிப்படையான கொள்கைகட்கு முரணான கொள்கைகள், தவமறைந்தல்லவை செய்யத் தலைப் பட்ட தன்னல நாட்டமுடைய போலி மக்களால் நமது சமயநெறிகளில் நுழைக்கப்பட்டன.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பது நமது மெய்யாகமத்தே கூறிய மந்திர மொழியன்றோ? ஈண்டுக்காணும் தேற்றேகாரங்களின் பொருள்தான் என்ன? இக்கொள்கை இற்றைநாளில் போற்றப்படுகின்றதா? உயர் குலங்கள் எத்தனை? இழிகுலங்கள் எத்தனை? ஒழுக்கத்தாலும், செயலாலும் உயர்வு தாழ்வுகள் கருதப்பட்டால் இழுக்கொன்றுமில்லை; ஆண்டுக்கூட கல்லாமக்களிடம் இழி செயல் கண்டவிடத்து, சைவசீலத்தைப் பாராட்டுபவர், பரிவிரக்கங்காட்டி அவர்களைப் பேணுதல் கடன். பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் உண்டென்பது தமிழரின் கொள்கையன்று. இக்கொள்கை நாட்டில் நுழையக்காணுமுன் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனத் தமிழ்மறை அதனைத் துணிபுடன் மறுத்தது. "சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி" என இரங்கும் மணிவார்த்தையின் குறிப்புதான் யாது? 'வறியார்க்கொன்றீவதே ஈகை' என்பதை மறந்து குலப்பெருமையே பேசித் தருக்குடன் வாழ்ந்துவரும் இனத்தினர்கட்கு வரையாது வழங்குவதும், வறுமையாலும், பிணியாலும் நலிவுறும் எளிய மக்களைப்பேணு தொழிதலும் மடமையின் பாற்படுமன்றோ? நுண்ணறிவினால் மட்டும் ஒருவர் உயர்ந்தவரெனக் கருதல் மதியுடைமையல்ல. மக்கட் பண்பில்லாத வழி அரம் போலும் கூர்மையராயினும் மனித இனத்தினும் கீழ்ப்பட்ட மரமென மதித்தற்குரியர் என்பது தமிழ் வழக்கு. மேலை நாடு, அறிவு நூற்கலைகளின் நிலைக்களனாய்த் திகழ்கின்றது; அறிவும் ஆற்றலும் கணித்தறிய முடியாத அளவு படைத்து வைத்தும், ஒருவரோடொருவர் இகலி அடர்த்து, பிறரை அடிப்படுத்தும் கருத்திலே முனைந்து நிற்கின்றனர்; புதிது புதிதான உயிர்க்கொல்லிகளை ஆக்குவதே வேலையாயிருக்கின்றனர்; அறிவும் ஆற்றலும் மிக்கிருந்தும், அன்பு,

கண்ணோட்டம், வாய்மை ஆகிய மக்கட் பண்புகள் இல்லா வழி ஏதமே விளையுமெனத் தமிழறிஞர் கருதினர்.

சைவப் பெரியார்களின் கொள்கையும் இதுவேயாகும். 'அன்பே சிவம்', 'அன்பும் சிவமும் வேறென்பர் அறிவிலார்' என்பது பொய்யாமறை. அன்பு நெறிதான் சிவநெறி. அன்பும் அருளிரக்கமும் இல்லாது சைவத்தின் பெயரால் நிகழ்த்தப்பெறும் செயல்கள் எல்லாம் நமது மெய்ச்சமயத்திற்கு ஒவ்வாதனவென்று சமயப்பெரியார்கள் அறுதியிட்டுக் கூறியிருக்கின்றனர்.

'எவரேனும் தாமாக விலாடத்திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டாலுள்கி
உவராதே யவரவரைக் கண்டபோது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்துநோக்கி
யிவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
யிரண்டாட்டா தொழிந்தீசன் திறமேபேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே'

என நாவுக்கரசரும்,

'சிவனெனு மொழியைக் கொடிய சண்டாளன்
செப்பிடி னவனுட னுறைக
அவனொடு கலந்து பேசுக, அவனோ
டருகிருந் துண்ணுக வென்னும்
உவமையில் சுருதிப் பொருளினை நம்பா
வூமரோ டென்பயில் கொடியோன்
இவனெனக் கழித்தால் ஐயனே கதிவே
றெனக்கிலை கலைசையாண் டகையே'

என ஆகமங்களின் மெய்ப்பொருளறிந்து திராவிட மாபாடியம் அருளிய மாதவச் சிவஞான முனிவர் அவர்களும் கூறுவதன் பொருள்தானென்ன? சைவசமயிகள் ஒருவரோடு

ஒருவர் அன்பு பூண்டொழுகி இறைவன் திருவருளுக்குரிய ராகுதல் வேண்டுமென்பது முடிபன்றோ ? 'சாத்திரம்பல பேசுஞ் சழக்கர்காள் ! கோத்திரமும் குலமுங் கொண்டென் செய்வீர் ?' எனச் சமயத்தலைவர் அறைகூவி அழைத்துக் கூறும் மெய்யுரையின் உட்கிடையைச் சிறிதும் சிந்தித்தோ மில்லை ; ஆண்டவனது திருமுன்னர் நின்று, வாழ்த்தி, வணங்கி, வழிபடுவதை விட்டுப் பெருமை சிறுமைகளைப் பேசிக் கலாம் விளைத்து அவமே கழிகின்றோம். பிறப்பின் காரணம் ஒன்றுபற்றியே நமது சமயத்தினர் மிகப் பலரை இழித்துரைத்து வெளியே நிறுத்துகின்றோம் ; ஒரு சிலர் பழிபாவங்களைப் புரிபவர், சீலமும் நோன்பும் இல்லாதவர், எனத் தெரிந்துவைத்தும் குலப்பெருமை ஒன்றனைப் பேசித் தருக்குடன் அணுக்கராய் உள்ளே செல்லப் பார்த்து வருகின்றோம் ! "அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ் ?" என்ற முதுமொழி பொய்யாய்ப் பழங்கதையாய் மாறி விட்டது.

சமயகுரவர் நால்வரும் வழிபாடியற்றிய திருக்கோயில்கள் மிகவும் ஏற்றமுடையனவென்று நம்மவரால் மதிக்கப் பெறுகின்றன. அவை பழுதுபடா வண்ணம் பாதுகாத்தற் பொருட்டு, கோடிக்கணக்கான தொகைகளைச் செலவிட்டுப் புதுப்பிக்கத் திருப்பணிச் செல்வர்கள் முற்பட்டுச் செயற்கரிய அறவினைகளைப் புரிகின்றனர். தேவாரத் திருப்பாடல்களால் உய்திபெற்ற திருக்கோயில்களில், 'பண் சுமந்த பாடல்கள்' எனப்பெறும் தேவாரப் பதிகங்களைப் பூசனை வேளைகளில் ஓதுதற்கென நிபந்தங்கள் வைக்கப்பெறுவ தில்லை, அவற்றைப் பயிலுதற்குத் தேவாரப் பாடசாலைகள் நிறுவப் பெறுவதில்லை. சில திருக்கோயில்களில் அண்மையில் தோன்றிய தேவாரப் பாடசாலைகள் ஆக்கங்குன்றி யறையத் தலைப்படுகின்றன. தேவாரப் பணிபுரியும் ஓது

வார்களும், சைவத்தொண்டர்களும் ஆண்டவன் சந்நிதியில்
அவமதிக்கப்படுகின்றனர். இஃது இவ்வாறாக, "வேத
மோதின் விழிநீர் பெருக்கி, நெஞ்சநெக்குருகி நிற்பவர்க்
காண்கிலேம்" எனுங் கூற்றிற்கு இலக்காகிய வேதங்களை
ஓதுதற்கும் பயிலுதற்கும் சாதனங்கள் அமைக்கப்பெறு
கின்றன. ஓதுவோரும், கேட்போரும் பொருளறிய மாட்
டாத ஓத்துக்களின் பொருட்டுப் பெரும்பொருள் செலவிடுத
லும், திருக்கோயில்களை வாழ்வித்துவரும் தெய்வத் தமிழ்
மறைகளை நெகிழவிடுதலும் என்ன நேர்மையென உய்த்து
நோக்குங்கள். தஞ்சைப் பெருஉடையார் கோயிலை (பிரக
திசர் கோயில் - இராசராசேச்சுரம்) எடுப்பித்த சோழர்குல
விளக்கமாகிய, திருமுறைகண்ட சோழன் எனப்பெறும்
இராசராச சோழதேவர் புற்றுச் சிறையாகவிருந்த திருமுறை
ஏடுகளை மீட்பித்து, நம்பி ஆண்டார் நம்பிகளின் பேருதவி
யால் திருமுறைகளாக வகுத்தனர். நம்பி ஆரூரனார், நங்கை
பரவையார், திருநாவுக்கரையர், திருஞான சம்பந்த அடிகள்
படிவங்களைப் பெருவுடையார் கோயிலில் நிறுவியும், திருக்
கோயிலில் நாடோறும் தேவாரம் விண்ணப்பஞ் செய்தற்கு
இசைவல்லார் நாற்பத்தெண்மரைக் கொணர்ந்து கோயி
லருகே குடியேற்றி அவர்களின் இயற் பெயருடன்
இராசராச பிச்சனை சதாசிவசிவன், மாதேவன் திருஞான
சம்பந்தனை ஞானசிவன், கயிலாயன் ஆரூரனை தர்ம
சிவன் என, சிவன் எனும் பெயரைச்சூட்டி அழகு செய்
தும், சிவம்பெருக்கும் திருநெறியைப் போற்றி வளர்த்த
செயற்கருஞ்செயல் எமது உள்ளத்தைக் கவர்கின்றது. இவ்
வரும்பணி நிகழ்ந்தகாலம் 978 A.D. இப்பேரரசனுடைய
கொற்றமும், வெற்றியும், இவன் இயற்றிய சைவத் திருப்
பணிகளால்மட்டும் நமது நினைவிற்குவந்து, புகழ்ந்து பாராட்
டப் பெறுகின்றன. ஆயிரம் ஆண்டுகளின் மேற்பட்ட கால

மாய் நம்மவர் உயிரெனப் போற்றிப் பாதுகாத்துவரும் தெய்வத் திருப்பாடல்கள், நமது காலத்தே வழக்கொழிந்து மாய்வதா? ஆணவ முதலிய கட்டுக்களில் அகப்பட்டு உய்தி காணமாட்டாது, நிலையற்ற நிலைமைகளையும், பொருள்களை யுமே நாடியும், உழந்தும், இழந்தும் அலமந்து நிற்கும் சிற் றுயிர்கட்கு உய்யும் வழியை எளிதே விளக்கி வாழ்விக்கும் பேரறிவுச் செல்வங்களாய நமது எய்ப்பில் வைப்பைப் பேணுதொழிந்து வாளாவிருப்பது பேதைமை யல்லவா?

தமிழ் நாட்டின் எல்லைக்குள் ஊர்கள்தொறும் நன்னெறி நின்று, பேரின்பப் பேற்றினை எய்திய சைவப் பெரியார் களின் பெயரால் திருமடங்கள் இருந்து வருகின்றன. அவ் வப்பெரியாரின் படிமத்தை ஆண்டு நிறுவி நற்புகை விளக்கங் களால் பூசனை புரிவதுண்டு; ஆண்டுவிழாக்காலத்து மயேசுர பூசையென அன்னம் படைப்பதுண்டு; பல்லக்கு, கொட்டு முழக்கு முதலிய ஆரவாரங்களுடன் பெரும்பொருட் செல வில் விழா வெடுப்பதுண்டு. திருமடத்தில் வீற்றிருக்கும் பெரியாரின் வாழ்க்கைக் குறிக்கோள் யாது? அவர் புரிந்த சைவப்பணியாது? செயற்கருஞ் செய்கையின் மாண்பென்ன? சைவ நன் மக்கள் உய்திபெறுமாறு அவர்கள் கூறிய மெய் யுரைகள் யாவை? அவற்றைக் கற்று ஐயந்திரிபறவுணர்ந்து, அதற்குத் தக நிற்க முயல்வோர் யாவர்? என்றெல்லாம் ஆய்ந்து சிந்தனை செய்தால், ஆண்டுப் புரியப்பெறும் முயற்சி கள் யாவும் விழலுக் கிறைக்கப்படும் நீரெனப் பயனற்ற செயல்களாய் முடிகின்றன. அவ்விழாக் காலங்களில் இசை வல்லுநர்களைக் கொணர்ந்து கதைகள் செய்வது, இன்னிசைப் பாடல்கள் பாடச்செய்வது முதலியன நிகழ்வது பெருவழக் காய் இருந்து வருகின்றது. இவ்விசைப் புலவர்கள் ஒழுக் கத்தால் மதிக்கப்படுபவர் அல்லர்; இவர்கள் நிகழ்விக்கும் இசைப் பாடல்களின் பொருள் பெரும்பாலும் பாடகருக்கே

தெரியாது; கேட்போருக்கும் விளங்காது; திருமடத்தில் கோயில் கொண்டிருக்கும் பெரியார்களின் குறிக்கோளுக்கு இயைபில்லாதனவா யிருக்கும்; கருங்கல் மனத்தையும் கரைத்து, ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் தேவார திருவாசகமாகிய தெய்வத் திருப்பாடல்களையே ஒழுக்கம் நிரம்பியவர்களைக் கொண்டே பாடச் செய்வதும், அவற்றின் செம்பொருளை விளக்க வல்ல புலவர்களைக் கொண்டு மெய் யுரைகளை உலகறிய நிகழ்த்தச் செய்வதும் மடத்தின் முதல் வர்கள் மேற்கொள்ள வேண்டிய செயல்கள் அல்லவா? மயேசுர பூசை நடக்குமிடங்கட்கு யானும் அழைக்கப் பெறுவதுண்டு. என்போன்ற பலர் பந்திபந்தியாக இருந்து வயிறு புடைக்க உண்பதும் உண்டு. ஆனால் வறுமை, பிணி முதலியவற்றால் நலிந்து, பசியினால் துன்புறும் ஏழை மக்கள் வெளியே குழுமி ஓலமிடுவதும், தடிகொண்டு மொத்தப் படுவதும், பிடிசோறுதானும் கிடைக்கமாட்டாது ஏக்கற்று வறிதே அகல்வதும் பெருவழக்கு. அன்னதானம் இவ்வாறு செய்யலாகாதெனவும், தெருக்கள் கூடுகின்ற சந்திகளிலே இருந்து சோறோ, கஞ்சியோ, கூழோ வழங்கப்பெறவேண்டு மெனவும் கூறிய ஏசுநாதரின் கூற்று என் நினைவுக்கு வருவ துண்டு. பசியினால் வாடி வருந்துகின்ற ஏழை மக்கள் காத் திருந்து அவலமுறவும், எம்போன்றவர் அறுசுவை உணவு களை அருந்திக் களிப்பதும் அறநெறியாகுமா? அன்புநெறி யாகுமா? துன்பத்தில் மூழ்கி வருந்தும் ஏழை மக்களுக்கு, மேலும் துன்பத்தை விளைப்பது கருணைக் கடலாகிய சிவ பெருமானுக்கு எங்ஙனம் உவப்பைத் தரும்? ஏழை மக்க ளின் பசித்துன்பத்தைக் கண்டு இரக்கத்தால் உருக வேண் டிய நமது நெஞ்சம் இளகா இரும்புபோல் இறுக்க முற்றுத் தடிகொண்டு மொத்தச் செய்யுமெனில், சிவம்பெருக்கும்

செந்நெறியில் யாம் சார்ந்தவரென எண்ணுதல் பேதைமை யல்லவா?

சைவப் பேரரசியலிற் பங்குகொண்டு சிவபோகத்தைத் துய்க்கும் உரிமை பெண்மக்களுக்கும் உரியது. புதுவதாக நமது நாட்டில் நுழைந்த அயன்மொழி நூலோர், பூசனை முதலியன புரியவோ, வேதநூல் பயிலவோ, பெருநெறி எய்தும் முயற்சியை மேற்கொள்ளவோ பெண் மக்கள் உரியரல்லர் எனும் கொள்கைகளை ஆட்சியிற் கொணர்ந்தனர். தமிழரின் அடிப்படையான அறங்களை வரையறுத்து விளக்கும் தொல்காப்பியத்திலோ, தமிழ் மறையாகிய திருக்குறளிலோ, சைவநெறியை உய்வித்த தேவார திருவாசகமாகிய திருமுறைகளிலோ மக்கட் கூட்டத்தில் பாதிப் பகுதியினரைக் கீழ்நிலைப்படுத்தும் இக்கொள்கை குறிக்கப்படவில்லை. 'பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல் - சிறந்து நின்சேவடியே சேர்ந்தேன்' எனவும், 'கண்டெந்தை என்றிறைஞ்சிக் கைப்பணி யான் செய்யேனேல் - அண்டம்பெறினு மதுவேண்டேன்' எனவும் வீடும் வேண்டா விறலொடு வாழ்ந்து பிறவாநெறியடைந்த காரைக் காலம்மையின் வாழ்க்கை வரலாறு புனைகதையா? 'நின்ற தபோதனியாரு நின்மலன் பேரருணினைந்து..................
...........திருநீற்றை யஞ்செழுத்தோதிக் கொடுத்தார்.' எனச் சேக்கிழார் பெருமானின் புகழுரைக்குரிய திலகவதியார் ஞானகுருவாயிருந்து அப்பரடிகளைச் செந்நெறிப்படுத்தவில்லையா? 'பூசுரர் சூளாமணியாம் புகலிவேந்தர் போனகஞானம் பொழிந்த புனிதவாக்காற், றேசுடைய பாடல் பெறும் தவத்தினர்' எனக் குறிக்கப்பெற்ற மங்கையர்க்கரசியார் தவநெறியிற் றலைமை எய்தவில்லையா?

"கருகுகுழல் மடவார்கடி குறிஞ்சியது பாடி
முருகன்னது பெருமைபகர் முதுகுன்று"

'...மனைகள் தோறு மிறைவனது தன்மைபாடிக்
கருந்தடங் கண்ணார் கழல்பந்தம்மானைப் பாட்டயருங்கழுமலமே'

"புலன்களைச் செற்றுப்பொறியை நீக்கிப்
புந்தியிலும் நினைச்சிந்தை செய்யும்
அலங்கல் நல்லார்கள் புகுதுங்கூடல்"

என்றெல்லாம் ஞானசம்பந்தப்பிரான் வாயாரப் புகழுதற்குரிய நெறியில் பெண்மக்கள் ஊர்கள்தொறும் சமயப்பணி செய்து வந்த செய்திகளைப் பல்காலும் நினைந்து நாம் தெருட்சி பெறவேண்டுமன்றோ! செயற்கரிய செயல்கள் புரிந்த சிறுத்தொண்டர், இயற்பகையார் ஆதிய செல்வர்களின் தொண்டுகள் சிறப்பதற்கு உறுதுணை உதவிய மனைவிமார்களின்தொண்டு சாலவுஞ் சிறந்தது. பண்டைத் தமிழகம் எந்நாட்டினும் நன்றாகத் திகழ்ந்ததன்காரணம் தமிழ்நாட்டுப் பெண்மணிகள் புலமை நிரம்பிய அறிஞர்களாய், நன்னெறியைக் கடைப்பிடித்து எண்ணிய எண்ணியாங்கு முடிக்கும் திண்ணியராய், பெண்மை நலன்கள் நிரம்பிய நிறை குணத்தராய், வாழ்க்கையிற் சான்றோராயும், போரில் கொற்றமுறுவோராயும், தம்மக்கள் திகழக் கண்டு ஈன்றபொழுதினும் பெரிதுவக்கும் பெற்றியினராய் விளங்கினர். குறமகள் இளவெயினியார், வெண்ணிக்குயத்தியார், ஔவையார், காக்கைபாடினியார், பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு ஆதிய பெண்புலவர் மிகப்பலர், பலகுலத்தினர், பலநிலையினர் பாடிய செய்யுட்கள் சங்க நூல்களை அணி செய்வது நாடறிந்த செய்தி. சிந்தைக்கினிய, செவிக்கினிய பாடல்களைப் பாடும் பெண்புலவர்கள் 1800 ஆண்டுகளின் முன்னரே பாடிய சீர்த்தி தமிழ் நாட்டிற்கும் தமிழ்மொழிக்குமே உரிய ஒப்புயர்வற்ற தனிச்

சிறப்பாகும். இதனை அறிந்துவைத்தும் 'அறிவறிந்த என்பதனான் மக்களென்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது' எனவும் 'பெண்ணியல்பாற்றானாக அறியாமையின் கேட்டதாய் எனவும் கூறினார்' என்ற பரிமேலழகர், வடநூலோர் மதத்தை வலிந்து நுழைப்பது கண்கூடல்லவா? தொல்காப்பியம், எழுத்ததிகாரம் 1-வது சூத்திரத்திற் காணும் 'அகரமுதன னகரவிறுவாய்' எனும் சொற்றொடர்க்கு உரை கூறும் இளம்பூரணர் 'அகரம், தானும் இயங்கித், தனிமெய்களை இயக்குதற் சிறப்பான், முன்வைக்கப்பட்டது. னகரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதற் சிறப்பான் பின்வைக்கப்பட்டது' எனக்குறிக்கின்றார். இஃது அறிவுடையோர் மதிக்குங் காரணமாகுமா? நிரம்பிய புலமையிருந்தும் வடநூலோர் கொள்கையில் அடிப்பட்டோர் வேண்டாக் கூற்றாக அக்கருத்துக்களை மனம் போனவாறெல்லாம் தமிழகத்தில் வலிய நுழைத்தும் பரப்பியும் வந்தனர். அறிவுப்புலம் நிரம்பிய பெண்ணரசிகள் தமிழ்நாட்டின் இல்லக விளக்கமாக இருந்து தமிழரின் கொற்றமும் புகழும் உலகெங்கும் பரவுமாறு தமது மக்களைப் பேணிவளர்த்தனர். 'பேதைமை என்பது மாதர்க்கணிகலம்' என்ற புதுக்கொள்கை தமிழகத்தில் பரவத் தலைப்பட்டகாலம் முதற்கொண்டு நமது பெண் மக்கள் அறியாமையில் ஆழ்ந்து பெண்மை நலன்கள் குன்றி கீழ்நிலை எய்தினர். நல்லறிவும், நல்லாற்றுப்படுத்தும் ஆற்றலும் இழந்த தாய்மார்களால் வளர்க்கப்பெறும் மக்கள், அறிவறிந்த நன்மக்களாதல் எங்ஙனம்? 'தாயைப்போலப்பிள்ளை' என்பது பழமொழி. 'தொட்டிலை அசைத்த கையே அரசையும் இயக்குகின்றது' என்பதும் ஓர் ஆங்கில முதுமொழி. தாய்மை அறமானது பேணப்படாமையால் நம்மவர் நிலைகுலைந்தது; பீடழிந்தது; நாமும் தடுமாறுகின்றோம்.

இதுகாறும் குறைபாடுகளென யான் கண்ட சிலவற்றைக் கூறிவந்தேன். இனி, அவற்றை அகற்றி, சைவ நன்மக்கள் செம்மை யுறுதற்பொருட்டுக் கடைபிடித் தொழுக வேண்டிய சில கருமங்களைக் குறிப்பிட்டு முடிப்பேன்.

சமயநெறியின் முதற்படி ஒழுக்கமேயாகும். சமய வேடங்களைப்புனைந்து, அவற்றிற்கு முரணான கொள்கையினராய்ப் பிறரை வஞ்சித்தும், பலர்க்குங் கெடுதிவிளைத்தும் தமது நலன்களைப் பெருக்குவதே குறிக்கோளாகக் கொண்டொழுகும் பேதைமாந்தர் சமயநெறிக்கு மிகவும் அப்பாற்பட்டவர். புறவொழுக்கங்கள் இன்றியமையாது வேண்டப்படுமெனினும், அகத்தூய்மையும் அன்புடைமையுமே உயிர்போலும் உடனிருந்து நம்மை உயர்நிலைக்கண் உய்க்கும் திறத்தனவாகும். உள்ளொன்றுவைத்துப் புறம்பொன்று பேசிப் பிறிதொன்று செய்வார் புரியும் பூசனைகளும் அறச்செயல்களும் அறிவுடையோர் வெறுப்பன வாகும். நமதுயிர்க்குயிராயிருந்து, தாயினுஞ்சாலப்பரிந்து, தனது ஈறிலாக் கருணையினால் நம்மை ஓம்பிவரும் இறைவனைப் பொய்ப் பூசனைகளால் ஏமாற்ற முடியுமா? 'பொக்கமிக்கவர் பூவும் நீருங்கண்டு நக்குநிற்பன்' 'வஞ்சனையாலஞ்செழுத்தும் வழுத்துவார்க்குச் சேயவன்' என்ற கூற்றுகள் பொய்க்குமா?

“ஒல்லையாறி யுள்ளமொன்றிக் கள்ளமொழிந்து வெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து காமவினை யகற்றி
நல்லவாறே யுன்றனாமம் நாவினவின் றேத்த
வல்லவாறே வந்துநல்காய் வலிவல மேயவனே”

எனப் புகலிவேந்தும்,

“மெய்ம்மையா முழவைச்செய்து விருப்பெனும் வித்தைவித்திப்
பொய்ம்மையாம் களையைவாங்கிப் பொறையெனு நீரைப்பாய்ச்சித்

தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளையுமன்றே."

என நாவின்வேந்தும் ஒழுக்கத்தின் விழுப்பொருளை விளக்கியிருக்கின்றனர்.

சைவநெறியைச் சார்ந்திருப்பவர் நினைவில் வைக்க வேண்டிய செய்தி மற்றொன்று. தனு, கரண, புவன போகங்களையெல்லாம் நமக்குத்தந்து, சைவஞ்சாரும் ஊழ்பெறலரிதென்று பாராட்டப்பெற்ற சைவச் சூழலில் நம்மைத் தோற்றுவித்த அருட்டிறனை உன்னி, அவற்றால் ஆக்கிக் கொள்ளவேண்டிய ஊதியங்களைப்பெற முயலவேண்டுவது சைவர் கடனல்லவா? நமது வாழ்க்கையின் முதல் எனத் தரப் பட்டிருக்கும் இக்கூறிய சாதனங்களை நாமே தேடிக்கொள்ள முடியுமா? நமது அறிவு செயல் ஆற்றல்களைச் சின்னீர இன்பங்களை அளிக்கும் புலனுகர்ச்சிகளிலே செலுத்தி, உண்பதும் உறங்குவதுமாக நமது வாழ்நாளைக் கழிப்பதா அறிவுடைமை? புலனுகர்ச்சி விலங்குகட்கும், மாந்தர்க்கும் உரிய பொதுச் செயல். நல்லறிவைத் தேடுவதும், கடவுள், உயிர், உலகம், என்ற பொருள்களின் உண்மை நிலைகண்டு, மெய்யுணர்வெய்தி அயராத இன்பப்பேற்றை அடைவதும், மாந்தர்க்கே உரிய செயல். மானுடம் பெற்றார்க்கே உரிய செயல்களில் தலைப்படாது, செவியிற்சுவை யுணரமாட்டாத வாயுணர்வின் மாக்களாய் அவமே வாழ்க்கையைக் கழிக்கின்றோமல்லவா?

"மனமெனும் புனத்தை வறும்பா ழாக்கி
காமக் காடு மூடித் தீமைசெய்
ஐம்புல வேடர் ஆறலைத் தொழுக
இன்பப் பேய்த்தேர் எட்டா தோடக்
கல்லா வுணர்வெனும் புல்வாய்அலமர
விச்சைவித் துதிர்த்துழி யாமெனப் பெயரிய

நச்சு மாமரம் நனிமிக முளைத்துப்
பொய்யென் கவடுகள் போக்கிச் செய்யும்
பாவப் பல்தழை பரப்பிப் பூவெனக்
கொடுமை யரும்பிக் கடுமை மலர்ந்து
துன்பப்பல்காய் தூக்கிப் பின்பு
மரணம் பழுத்து நரகிடை வீழ்ந்து
தமக்கும் பிறர்க்கும் உதவாது
இமைப்பிற் கழியும் இயற்கையோர்"

என நமது வாழ்க்கையை ஒரு நச்சுமரமாகச் சித்திரித்துக் காட்டும் பொருளுரைகள், பொய்த்திருவைத் துறந்துமெய்த் திருவைத் தேடிக்கொண்ட சைவப்பெரியார் ஒருவரின் கூற்று. நம்மை நன்னெறிக்கட் செலவிடாது தடைசெய்து தீநெறியில் உய்ப்பனவாகிய பொய்யும் மாயமும் நிறைந்த உலகியலில் யாம் வழுக்கி வீழாத வண்ணம் காப்பது நமது செம்மொழிச் செல்வர்கள் கூறிய மெய்வைத்த சொல்லே ஆகும்.

'இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
ஒழுக்க முடையார் வாய்ச்சொல்'

என்பது தமிழ்மறை. நன்னெறி யாது? தீநெறி யாது? சைவநன்னெறி பிறநெறிகளினும், எவ்வாறு சிறந்தது? 'சைவத்தின்மேற் சமயம் வேறிலை', 'சைவ சமயமே சமயம்' என்று மூதறிஞர் விதந்தோதியதன் பொருட்டென்னை? என்றெல்லாம் ஆய்ந்து தெளிவது சைவ நன்மக்களின் முதற் கடமை என யான் கருதுகின்றேன். சைவசமய குரவர்கள் நால்வரும், பொய்யடிமை இல்லாத புலவர்களும், நம்மை உய்விக்கும் பெருநோக்குடன் அருளிய சைவத் திருமுறைகளையும், சைவசந்தான குரவர்கள் அருளிச்செய்த மெய் கண்ட நூல்களையும் சைவ நன்மக்களாவார் ஆண் பெண் அனைவரும் முறையே பயின்று தெளிவுறவேண்டும். தேவார

திருவாசகமாதிய தெய்வப் பனுவல்களை முறையாக மனப் பாடஞ் செய்யவேண்டும்; இன்னிசையால் பாடப் பயில வேண்டும். அவற்றைப் பயிலும்போதும் பாடும்போதும் கடவுட்பணி செய்வதாகவே நினைந்து, அன்பு கசிந்துருகு நெஞ்சுடனும் தூய சிந்தனையுடனும் இருந்து விண்ணப்பிக்க வேண்டும்.

சைவநன்மக்கள் புரியவேண்டிய மற்றொரு கடமையும் உண்டு. கோயில் வழிபாடு இன்றியமையாத சாதனம் என்பதை மறக்கவொண்ணாது. சமய குரவர்கள் இறைவன் திருவருளை நிரம்பப் பெற்றிருந்தும், கோயில் வழிபாட்டினை மேற்கொண்டு ஒழுகினர்.

"குறிகளும் மடை யாளமுங் கோயிலும்
நெறிகளும் மவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியிலீர் மன மென்கொல் புகாததே?"

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சம்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே"

எனக்கூறி நமது ஏழைமைக் கிரங்குகின்றார்.

ஆண்டவனை வழுத்துதற்குப் பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய பனுவல்கள் இனிய தமிழில் இருப்பவும், அவற்றால் வழுத்தாது, பொருளற்ற மொழியால் அருச்சனையாதிய சடங்குகள் புரியவேண்டுமெனும் குருட்டு வழக்கத்தை விட்டொழிக்க வேண்டும்.

'அர்ச்சனை பாட்டேயாகும், ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும்வாயார்'

என்றது இறைவனது ஆணையன்றோ? 'பந்து, வேற்று,

கொன்றிவை மூன்று, நந்தலி லருச்சனை நாட்டிய தாகும்' என அகத்திய முனிவர் எடுத்துக்காட்ட வில்லையா? செந் திறத்த தமிழோசை மலிந்த பாடலுக்கிரங்கிய பரமன், ஊழிக்காலத்தே வருந் தனிமை கழிக்கவேண்டி, வாசகத் தின் ஒரு பிரதி கருதிய செய்தியைத் தமிழ்நாடு அறியு மன்றே.

கடவுள் வழிபாடுபோலவே, மக்கள் ஊழியமும் இன்றி யமையாத சாதனமாகும். "தயாமூல தன்மமென்னுந் தத் துவத்தின் வழிநின்று சார்ந்தோர்க்கெல்லாம், நலங்கொடுக் கும் நம்பி' எனக் கூறுமுகத்தால், அருள்வழி நிற்கும் அறமே சிறந்த சாதனமென விளக்கவந்த அப்பமூர்த்திகள் 'தொண்டலாற் றுணையுமில்லை', 'அன்பலாற் பொருளு மில்லை' என இதனையே வலியுறுத்துகின்றார். 'எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி யிரங்கவும்நின், தெய்வ அருட் கருணைசெய்யாய்' என்ற தாயுமானப்பெருந்தகையின் விண் ணப்பமானது நமது நலங்கருதிப் பிற உயிர்கட்குத் துன்பு செய்ய வொண்ணாது என்ற அறத்தையும், பிறவுயிர்கள் வறுமை, பிணி, துன்புகளால் வருந்தக் கண்டவிடத்துச் சாதி சமய வேற்றுமைகளைக் கருதாது அவைமாட்டுப் பரி விரக்கத்துடன் ஒல்லும் வகையான் அறவினை யோவாதே செல்லும் வாயெல்லாஞ் செயல் வேண்டுமென்னும் அறத்தை யும் நாட்டுகின்றது.

கடைசியாகக் கூறவிழையும் மற்றுமொரு செய்தி உளது. அதுதான் சைவசபைகளின் இன்றியமையாமை. சிற்றுயிர்கட்கு உறுதுணையாவது நல்லாரிணக்கம். 'நல்லா ரைக் காண்பதுவு நன்றே, நலமிக்க நல்லார்சொற் கேட்பதுவு நன்றே, நல்லார்—குணங்க ளுரைப்பதுவு நன்றே, யவரோ டிணங்கியிருப்பதுவு நன்று' என்ற முதுமொழி உயிர்களின் சிறந்த தத்துவம் ஒன்றனை விளக்குவதாகும். உலகத்தைச்

சார்ந்தவழி அதன் மயமாகவும் சிவனைச் சார்ந்தவழி சிவமய மாகவும், உயிர் நிற்குமென்பது சைவநூன் முடிபு; அதுவே மூதறிஞர்கள் கண்ட உண்மை. ஆதலால் நன்னெறிநாடுவோர் கூடிச் சிவத்தொண்டு புரிதற்கான சங்கங்கள் மிகவும் வேண் டற்பாலன. சன்மார்க்கர்கள் கண்ணுங் கருத்துமாய்ப் பாது காத்தும் வளர்த்தும் வருகின்ற இத்தகைய சங்கங்களால் விளையும் நலன்கள் எண்ணிறந்தன. ஒழுக்கத்தால் விழுப்ப முற்ற அறிஞர்கள் ஆய்ந்து தெளிந்த உண்மைகளை யாவரும் எளிதே அறிந்து நல்லாற்றுப்படுதற்கு எத்துணை வாய்ப் புடையதா யிருக்கின்றது. இத்தகைய பேரவை இருந்ததா லன்றோ யாமெல்லாம் ஒருங்குகூடி, கொண்டுங் கொடுத்தும் உறவாடவும் தெருட்சிபெறவும் முடிந்தது. 'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்' 'கற்றிலனாயினும் கேட்க' வென்ற கூற்றுக்களும் இதனையே விளக்குகின்றன. சைவ மரபிற் பிறந்த மக்களனைவரும் இச்சபையில் உறுப்பினராய்ச் சேர்ந்து செயலாலும் பொருளாலும் சங்கத்தை வளனுறச் செய்து, சங்கப் பணிகளைப் புரிந்துவரும் அன்பர்களை மேன் மேலும் ஊக்கிப் பயன்கொள்ள முயல்வது அறிவுடைமை யாகும். சங்கம் புரிய வேண்டிய பணிகள் எண்ணிறந்தன. விரிப்பின் எல்லையில்லாது பெருகும். திக்கற்றிருக்கும் இளைஞர்களைப் பாதுகாவல் புரிந்து, தலையளிசெய்து அறி வும் ஆற்றலும், சீலமும் நோன்பும் உடைய நன்மக்களாக வளர்ப்பதற்கு இல்லமொன்றேனும் நிறுவுதல் வேண்டும்; ஆங்குப் பயிலும் மாணவர்கள் உடல் வலிமையும், நெஞ் சுரமுமுடைய வீரர்களாய், அன்பு, நாண், ஒப்புரவு, கண் ணோட்டம், வாய்மை ஆகிய ஐந்து சால்பையுமுடைய சான் றோராய் வளர்க்கப்படுதல் வேண்டும். பாடசாலைகள், தொழிற்சாலைகள், மருத்துவசாலைகள் ஆகிய நிலையங்கள் நாடெங்கும் நிறுவவும் ஆங்குப் பணிபுரிவோர் யாவரும்

சைவத்திறங்களை நன்குணர்ந்து நெறிநிற்கும் பெற்றியரா யமர்த்தவும் வேண்டும். இந்த எண்ணங்கள் நிறைவேற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக! வம்மின் புலவீர்! கைசெய்து உய்மினோ!!

"தென்னாடுடைய சிவனே போற்றி !
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

# திருக்குற்றாலக் காட்சி

[G. கலியாணம் B. A., Dip. Econ.,]

மரங்கள் செறிந்த மலைத்தொடர்ச்சி; மலைச் சாரிலினின்றும் விழும் ஓர் அழகிய நீர்வீழ்ச்சி; வீழ்ந்து ஓடும் அருவியின் பாங்கர் அமைந்திருப்பது ஆலயம்; அவ்வாலய வாயிலில் பல அடியவர் குழுமியிருக்கின்றனர்; அவர்களுள் தாரகைகள் நடுவே தயங்கும் தண்மதியென ஓர் இளஞ் சிறார் நிற்கின்றார்; ஆண்டவனை அகங்குழைந்து பாடுகின்றார்:—

"வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண் டியாழ்செய் குற்றாலம்
அம்பால் நெய்யோ டாடல் அமர்ந்தான் அலர்கொன்றை
நம்பான் மேய நன்னகர் போலும் நமரங்காள்"

இது நடந்து சற்றேறக்குறைய 1300 ஆண்டுகள் இருக்கும். அதே காலத்தில் வதிந்தார் மற்றொரு பெரியார்; "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்பதை வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டவர்; முன்சொன்னவரினும் வயதில் முதிர்ந்தவர்; திருக்குற்றாலத்திற்குச் செல்லாத நிலை

மையில் செய்மையினின்றே துதிக்கிறார்; உடலெடுத்த பெரும்பயன் உமைபங்கனை வழிபடும் பொருட்டே என்பதை வற்புறுத்தப் புகுந்தவர், திருவங்கமாலையைப் பாடுகிறார்; அதில் "உற்றா ராருளரோ உயிர் கொண்டு போம் பொழுது குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்குற்றா ராருளரோ" என்று குறையிரந்து நிற்கிறார். இவ்விரு அடியவரும் நிலவிய காலத்துக்கு முன்போ பின்போ இருந்தவர் என ஆராய்ச்சியாளர் முடிவுக்கு அகப்படாத மற்றொரு அடியார் ஒருவர்; அவர்தம் மணிமொழிகளால் பணியணிபரமனை அணிமாலை சாற்றிப் புகழ்கின்றவர்; முற்கூறிய அடியார் கருத்தேபோல ஒரு பாட்டினை அருளுகின்றார்:—

"உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரையான் வேண்டேன் கற்பனவும் இனியமையுங்
குற்றலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே."

இவ்வாறு ஆன்றோர்களால் போற்றப் பெற்றிருக்கும் தலத்தைப்பற்றிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம். இது திருநெல்வேலிச் சீமையில் தென்காசி புகைரதச் சாலையினின்றும் $3\frac{1}{2}$ கல் தூரத்திலுள்ளது. தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டுப் பாடல் பெற்ற சிவத்தலங்களில் இதுவுமொன்று. இவ்வூர் கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 550 அடி உயரத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் சரிவில் இருக்கிறது. இவ்வூரைக் குற்றாலம் என்றும், குறும்பலா என்றும் தேவாரம் குறிக்கிறது. தலபுராணத்தில் இதற்கு 21 பெயர்கள் உண்டு என்பதைத் தலமகிமைச் சருக்கத்தில் பின்வருஞ் செய்யுட்களில் கூறப்பட்டிருக்கிறது:—

"பிதிர்கண்டர் தீர்த்த புரஞ்சிவத்து ரோகந்தீர்த்த பெருமைமூதூர்
ம துவுண்டானுயிர் மீட்டபுரம் பவர்க்கமீட்டபுரம் வசந்தப்பேரூர்

முதுகங்கை வந்தபுரஞ் செண்பகாரணிய புரமுத்தி வேலி
நதிமூன்றின் மாநகாந் திருநகர நன்னகர ஞானப்பாக்கம்.
வேடன்வலஞ் செய்தபுரம் வேழம்பூசித்தபுரம் வேதசக்தி
பீடபுரஞ்சிவ முகுந்தபிரமபுர முனிக்குருகும் பேரூர்தேவ
கூடபுரந் திரிகூடபுரம் புடார்ச்சுனபுரம் பொற்குறும்பலாவி
சேடபுரமென விருபத்தொரு நாமம்பெற்றபதி திருக்குற்றாலம்."

கல்வெட்டுகளில் "தென்வாரி நாட்டுத் திருக்குற்றாலம்" என்று குறிக்கப்பட்டிருக்கிறது. "திருக்குற்றாலர் தென் னாரியநாடே" என்று கூறுவர் குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர். ஆங்கிலத்தில் கோர்ட்டாலம் (Courtallam) என வழங்குகிறது.

ஈண்டுச் சிவபெருமான் கோயில் ஒன்று கிழக்கு நோக்கியுளது. இது சங்கு வடிவமாய் அமைக்கப்பட் டிருக்கிறது. அதை, "நத்தமே சதுரங் கூர்ம நளினஞ்சக் கரமென்றுய உத்தமா லயமோரைந்தில் உயர்ந்தது பணிலக்கோயில்" என்று தலபுராணம் சிறப்பாகக் கூறுகிறது. ஆலயமும் பூசை முதலியனவும் மகுடாகமப்படி இருக்கின்றனவாம். சித்திரை, ஐப்பசி, மார்கழி இம்மாதங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. சுவாமியின் பெயர் திருக்குறும்பலா ஈசர், திருக்குற்றால நாதர். அம்பிகையின் திருநாமம் குழல் வாய்மொழியம்மை. அம்மன் கோயில் சமீபத்தில் நாட்டுக் கோட்டை செட்டியார் ஒருவரால் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. ஈசன்கோயில் பழைமையாகவே இருக்கிறது. கோயில் முன்னால் திருமால் கோயிலாக இருந்து பின்பு சிவன்கோயில் ஆயிற்று என்று சொல்லப்படுகிறது. கந்தபுராணம் அசுர காண்டம் திருக்குற்றாலப் படலத்திலும், தல புராணத்தில் திருமால் சிவபிரானான சருக்கத்திலும் இவ்வரலாறு காணப்படுகிறது.

முதலில் கந்தபுராணத்தில் கூறியிருக்கும் வரலாற்றைப் பார்ப்போம். கைலைநாதன் ஆணையைத் தலைமேற்றாங்கி அகத்திய முனிவர் வடக்கிருந்து தென்னாடு போந்தார்; திருக்குற்றாலத்தைக் குறுகினார். ஆங்குள்ள வைணவர்கள் அவரை "திருநீறும் கண்மணியும் அணிந்துகொண்டிருக்கிறாய்; தேவர்களும் அறிய உலகில் பிச்சை எடுத்தவனுக்குத் தொண்டன் நீ; ஆதலால் இவ்வூரை அணுகாது அகல்வாய்" என்றனர். அவர்கள் அகந்தையை அடக்க எண்ணித் தம் மாயா வல்லமையால் பாகவத உருக்கொண்டு அகத்தியனார் மறுபடியும் வந்தார். வந்தவரை வைணவர்கள் வரவேற்று அரிதுயில் அமர்ந்த அண்ணல் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். பாகவதர் வலம் வந்து வைணவர்களை நோக்கி "வழிபடும் விருப்புடையேன்; திருமஞ்சனம் முதலியன கொணர்மின்" என அவர்களும் கொண்டுவந்தனர். "நான் அருச்சிக்கும் விதிமுறையைப் பாருங்கள்" என்று சொல்லி,

"அறுகுமதி நதிபுனையுஞ் செஞ்சடையெம்
பெருமானை யகத்துட் கொண்டு
சிறுகுமுரு வுடையமுனி நாரணனார்
திருமுடிமேற் செங்கையோச்சிக்
குறுகுகுறு கெனவிருத்தி யொள்ளாக்கிற்
புனைபாவைக் கோலமீது
மறுகுதழலுற் றென்னக் குழைவித்தோர்
சிவலிங்க வடிவஞ் செய்தான்"

அதைக் கண்ட வைணவர்கள் அவரைப் பிடிக்கச் சூழ, அகத்தியர் நோக்கினின்றும் கோபத்தீயெழுந்தது. அதற்கு அஞ்சி வைணவர்கள் அவ்வூரைவிட்டு ஓடிவிட்டனர். "இன்று முதல் சிவனிடம் ஈதாயிற்று" என்று சொல்லி அகன்றார் அகத்தியனார்.

தலபுராணத்தில் கதை சிறிது மாறுதலோடு காணப்படுகிறது. வைணவர்கள் கோயிலுக்குள் போகாமல் தடுத்தனர். அகத்தியனார் "பின்னும் மதிச் சடையார்க்கும் பெருந்திகிரிப் படையார்க்கும் பேதம்" யாதும் இல்லை யெனப்பல வாறு எடுத்துக் கூறியும் கேட்டார்களில்லை. ஆதலின் அவர் அகன்றுபோய் அணித்தே இலஞ்சி யென்னும் பதியில் கோயில் கொண்டிருக்கும் குமரனை நோக்கிக் குறையிரந்தார். அப்பெருமான் ஆணையிட்ட வண்ணம் வைணவக் கோலங்கொண்டு திரும்பிவந்து குற்றாலக் கோயிலினுட்புக்கு, திருக்கடைக் காப்பு செய்து,

"முறுகுவலம் புரிக்கரத்து மான்குறுகப் பெரியதுழாய்முடியின்மீது
சிறியமதிக் கலைகுறுகத் திலகநுதல் விழிகுறுகச் செழும்பூண் மார்பி
னிறையரவப் பணிகுறுக நிகிலவுல கமுநிறைந்து நீண்ட மேனி
குறுகுறுகெனப்பரவித் திருவடிக்கீழ்க் குறுமுனிவன் குறுகுங்காலை"

ஆண்டவன் சிவலிங்க வடிவாயினன். "குறுகுடாப்பா குற்றாலப்பா" என்ற பழமொழி இப்பொழுதும் அப்பக்கங்களில் வழக்கிலுள்ளது. நீலமேனி நெடியோன் கோயில் ஆலமுண்ட அண்ணல்கோயில் ஆன வரலாறு ஓர் உண்மை நிகழ்ச்சியையே குறிக்க வேண்டுமென்று அறிஞர்கள் கருதுகின்றனர். அது எவ்வாறாயினும் ஆக.

இப்பதியில் கூத்தப் பெருமானுக்கே முதன்மை கொடுக்கப்பட்டிருக்கிறது. குற்றாலநாதர் கோயிலுக்கு வடபால் கூத்தப்பெருமான் ஆலயம் உளது. "குற்றாலத்துறை கூத்தன்" என அப்பர் சுவாமிகளும், "குற்றாலத்தெங் கூத்தா போற்றி" என மணிவாசக அடிகளும் போற்றியிருக்கின்றனர். ஐந்து மன்றங்களான இரத்தின சபை, பொற்சபை, வெள்ளிச்சபை, தாம்பிரசபை, சித்திரசபை, என்பவற்றுள் இது சித்திரசபை. மற்றவை திருவாலங்காடு சிதம்பரம், மதுரை, திருநெல்வேலி என்பன. தலபுராண

முடையார் " வைத்த தாம்பிரம் பொன் வெள்ளி சித்திர, மணி மன்றைந்திற் சித்திரப் பொதுவே மேலாஞ் சிற் பொதுவென்னும் வேதம் " என்று கூறியிருக்கின்றனர். குறும்பலா ஈசர் கோயிலில் திருமாலுக்கும், அகத்திய ருக்கும் கோயில்கள் உள்ளன. பராசத்தி பீடம் தனிச் சிறப்புடையது. இத்தலத்தின் சிறப்புமரம் பலா. அதை நான்மறை வடிவம் என்பர். காழிப்பிள்ளையார் இதற்கெனத் தனியே திருக்குறும்பலாப்பதிகம் என்று பாடியிருத்தலால் மிக்க மகிமை வாய்ந்ததென்பர். குறும்பலாவின் கனிகள் கசக்குமென்றும், மனிதர்கள் அவற்றை உண்ணக் கூடா தென்றும், குரங்குகளே தின்கின்றன என்றும் அங்கு ளோர் சொல்கின்றனர்.

இனி, தீர்த்தங்களைப் பற்றிச் சிறிது கூறுவோம். தலபுராணத்தில் ஐந்து தீர்த்தங்கள் கூறப்படுகின்றன. அவை சிவமதுகங்கை (தேனருவி), செண்பகத் தடாகம், பொங்குமாகடல், வடவருவி, சித்திரா நதி என்பன. சிவமது கங்கை அல்லது தேனருவி (Honey falls) ஊரினின்றும் மலைமேல் 3 கல் தூரத்துளது. செங்குத்தான பாறைப் பிளவினின்றும் சுமார் 100 அடி உயரத்திலிருந்து விழு கிறது. அதற்கப்பால் மலையடி வாரத்தினின்றும் ஒரு கல் தூரத்தில் சுமார் 20 அடி உயரத்திலிருந்து தண்ணீர் கீழே ஒரு குளத்தில் விழுந்து வழிந்து ஓடுகின்றது. இதையே சண்பகத் தடாகம் என்பர். இந்த இடத்திற்குச் சண்பக அடவி என்று பெயர். அது நாளடைவில் மருவி சண்பகா தேவி என மாறிவிட்டது. அத்துடனில்லாமல் சண்பகா தேவி என்ற பெயரால் ஓர் அம்மன் கோயிலும் கட்டப் பட்டு வழிபாடு நடைபெறுகிறது. இப்பெயர்த்திரிபைக் கூறுங்கால் மற்றொரு செய்தியையும் ஈண்டுக் கூறாமலிருக்க முடியவில்லை. அதாவது, குற்றாலத்தின் ஒரு பகுதி காசா

மேஜர் புரம் என்று காசா மேஜர் (Mr. Casa major) என்ற ஆங்கிலேயர் பெயரால் ஏற்பட்டிருக்கின்றது. மக்கள் அதைக் காசிமேசிபுரம் என வழங்குகின்றனர். அதையே பத்திரிகைகளில் சிலர் காசிமகேசுவரபுரம் என்று குறித்திருக்கின்றனர். காசாமேஜர், காசிமகேசுவரர் ஆனது விந்தையினும் விந்தையன்றோ! இதுநிற்க. சண்பகப் பொய்கையினின்றும் மலையின் மீதேயே ஓடிவந்த அருவி சுமார் 200 அடி உயரத்திலிருந்து கீழே வீழ்கின்றது. முதலில் அது பெரும் பள்ளத்தில் வீழ்வதை நோக்கினால் பொங்குவது போல் தோன்றுகின்றது. அதனால் அதற்குப் பொங்குமா கடல் என்றுபெயர். பள்ளத்தினின்றும் வழிந்து வீழ்வதை வடவருவி யென்றும், அங்கிருந்து பூமியில் ஆறாக ஓடுவதே சித்திராநதி என்றும் கூறுகின்றனர். மேற்சொன்ன ஐந்து தீர்த்தங்களே யன்றிக் குற்றாலத்தில் புலியருவி, சிற்றருவி (Forest falls), ஐந்தருவி (Five falls) என்ற நீர்வீழ்ச்சிகளும் இருக்கின்றன. மக்கள் பெரும்பாலும் வடவருவியிலேயே நீராடுகின்றனர்.

திருக்குற்றாலத்தைப்பற்றிச் சம்பந்தர் இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். அவற்றில் இயற்கையன்னையின் எழில் நலத்தை வாயாரப் புகழ்கின்றார். "மலையார் சாரல் மகவுடன்வந்த மடமந்தி, குலையார் வாழைத் தீங்கனி மாந்தும்" காட்சியை நாம் இன்றும் காணலாம். அப்பமூர்த்திகள் திருவங்கமாலையில் குற்றால நாதரைக் கூறியிருக்கின்றார். மணிவாசகப் பெருந்தகை "உற்றாரை யான்வேண்டேன்........" என்ற தொடக்கத்த செய்யுளில் கூறியிருப்பதை யன்றி, "குற்றாலத்துக் குறியாயிருந்தும்" என்றும், "குற்றாலத்தெங் கூத்தா போற்றி" என்றும், "குற்றாலத்தெம் குழகனை" என்றும் குறித்திருக்கின்றனர்.

பட்டினத்தடிகள்,

"காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல்விழுந்தே
உற்றா ரழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு"

என்று அருளியிருக்கின்றார். மற்றும் இற்றைக்குச் சற்றேறக்குறைய 220 ஆண்டுகள்முன் வதிந்த மேலகரம்—திரிகூட ராசப்பன் கவிராயர் என்ற புலவர்சிகாமணி தலபுராணம், குறவஞ்சி, குற்றாலமாலை, குற்றாலச் சிலேடை வெண்பா, குற்றால யமக வந்தாதி, குற்றாலஉலா, குற்றால ஊடல், பரம்பொருள்மாலை, குற்றாலக்கோவை, குழல்வாய் மொழி கலிப்பாமாலை, குழல் வாய் மொழி கோமளமாலை, குழல்வாய்மொழி வெண்பாவந்தாதி, குழல்வாய்மொழி பிள்ளைத் தமிழ், நன்னகர் வெண்பா எனப் பதினன்கு நூல்களை யாத்திருக்கின்றனர். தலபுராணம், குறவஞ்சி, குற்றாலமாலை என்ற இவையே அச்சுவாகனம் ஏறியிருக்கின்றன. இப்பொழுது குற்றால உலா, யமகவந்தாதி, சிலேடைவெண்பா இம்மூன்றும் அச்சாகிக் கொண்டுவருகின்றன. தலபுராணம் தான வைபவகாண்டம், சிவரகசிய காண்டம் என இருபிரிவுகளை உடையதாய் கடவுள் வணக்கம் அவையடக்கம் நீங்கலாக 32 சருக்கங்களைக் கொண்டதாக இருக்கிறது. அது இலக்கியச் சுவை ததும்பும் ஓர் இனிய நூல். குற்றாலக் குறவஞ்சியோ குறவஞ்சிகளில் தலைசிறந்ததென அறிஞர்கள் கண்டமுடிபு.

"ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகிய ருள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கு
வருந்தக் காண்பது சூலுளை சங்கு

போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறங் கீர்த்தி
திருக்குற் றாலர்தென் னாரிய நாடே "

என்ற ஒரு செய்யுளே இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். மலைவளத்தைக் கூறப்போந்த குறத்தியின் வாயிலாக,

"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்,
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடப்போம்
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை யிடிப்போம் "

என்றெல்லாம் கவி மொழிகளை வாரி வழங்குகிறார். இவை போன்ற பல பாடல்கள் சுவைக்கச் சுவைக்கத் தெவிட்டாத தெள்ளமிழ்தம் என்று கூறுவது மிகையாகாது. குறவஞ்சியின் பெருமையை வியந்தே அக்காலத்துத் தென்னாட்டை ஆண்டு வந்த முத்துவிசயரங்க சொக்கநாத நாயக்கரவர்கள் முற்றூட்டாக நிலம் கொடுத்தார். இதற்கொரு செப்பேடுமுள்ளது. இந்த நிலம் இப்பொழுதும் குறவஞ்சி மேடு என்ற பெயருடன் ஆசிரியரின் சந்ததியார் ஆட்சியிலிருக்கிறது.

இனி, குற்றாலத்திலுள்ள கல்வெட்டுகளைப் பற்றிச் சற்று ஆராய்வோம். குற்றாலநாதர் கோயிலின் இரண்டாவது சுற்றுத் தென் மதிற்சுவரில் பாண்டிய மன்னர்களின் 15-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளும், கோயிலுக்குத் தென்புறம் ஒரு தூணில் கல்வெட்டும் காணப்படுகின்றன. இவைகள் கோயிலுக்கு நிலங்களை மானியமாக விடப்பட்டதைக் குறிக்கின்றன. பரதேசிப்புதை என்ற ஒரு குகையில் 15 எழுத்துக்களாலான ஒரு கல்வெட்டு இருக்கிறது. அது எம்மொழி எழுத்துக்கள் என இதுவரை எவராலும் கண்டு பிடிக்கப்படவில்லை.

கல்வெட்டுகளே யன்றிச் சில செப்பேடுகளும் உள்ளன. இரண்டு செப்பேடுகள் திருநெல்வேலிச் சீமை வேளா

ளர்கள் கோயில் மாலைக் காலப் பூசைக்கு வரி கொடுப்ப தாகச் சம்மதித்ததையும், அவ்வரியை வாங்கிச் சேர்த்துக் கொடுப்பதாகத் திருவாவடுதுறை மடத்தார் ஒப்புக்கொண் டிருப்பதையும் கூறுகின்றனர். இன்னுமொரு செப்பேட்டி னின்றும் ஊரார் சிலர் கோயிலுக்கு வரி செலுத்துவதாக ஒப்புக்கொண்டதாகத் தெரிகிறது. மற்றுமொன்று வரகுண ராம குலசேகர பாண்டியன் காலத்தில் இருசேனையிலுள்ள வீரர்கள் கோயில் மாலைக்கால பூசைக்கு ஆண்டுதோறும் தலைக்கு இவ்வளவு பணம்கொடுப்பதென ஏற்பாடு செய்திருப் பதைக் காட்டுகிறது.

குற்றாலம் தென்னிந்தியாவில் ஒரு சிறந்த சுகவாச தல மாகவும் விளங்குகிறது. அங்கே ஆனி, ஆடி, ஆவணி மாதங் களில் குளிர்ந்த சாரற்காற்று வீசுகிறது. அப்பொழுது அநேகர் உடல் நலத்திற்காக அங்கே வந்து தங்குகின்றனர். நீர் வீழ்ச்சியில் மூழ்குவதால் நோய்கள் இயற்கையாகக் குணமடைகின்றனவாம். "போதும் பொன்னும் முந்தியருவி புடைசூழக் கூதன்மாரி நுண்துளி தூங்குங் குற்றாலம்" என்று சம்பந்தர் கூறியிருப்பது சாரற்காற்றையே குறிக் கும் போலும்.

மலைத்தொடர்ச்சியின் மாட்சி, நீர் வீழ்ச்சிகளின் காட்சி, சாரற்காற்றின் குளிர்ச்சி, சோலைகளின் எழில், ஆல யத்தின் அமைப்பு இவைகள் மனத்திற்கின்பம் தரு வன. அளப்பருந்தன்மை வளப்பெருங் காட்சியை அங்கேகாணலாம். ஆதலின் அன்பர்களே! இதுவரை நீங்கள் திருக்குற்றாலம் சென்றிராவிட்டால் ஒரு முறை யாவது சென்று, சிலநாட்களாவது தங்கியிருந்து இயற்கை யன்னையின் எழிலில் திளைத்து, நீர்வீழ்ச்சிகளில் படிந்து, திருக்குறும்பலா ஈசனை வழிபட்டு உடல்நலமும் உயிர்நல மும் எய்துமாறு வேண்டுகின்றோம். அப்படிச் செல்லுங்கால், குற்றாலத்திற் கண்மையிலுள்ள இலஞ்சி, தென்காசி, திரு மலை என்னும் தலங்களையும் தரிசிப்பீர்களாக.

# ஞானமணிவிளக்கு

[திரு. இருக்கம்-ஆதிமூல முதலியார்]

(மலர் - கக, இதழ் - கஉ, கூஅஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

38. குளங்களில் நீர்ப்பாம்புகள் பயமின்றி யாவருங் காணவுலாவுதலும், நஞ்சு பொதிந்த நாகங்கள் புற்றில் ஒளிந்திருத்தலும், வஞ்சகமற்ற நெஞ்சத்தினர் தம்மைக் கரவாமையையும், கபடமுற்ற நெஞ்சத்தினர் தம்மைக் கரத்தலையும் உணர்த்தும்.

39. கயங்களிற் சென்று படியுங் காராக்கள் தங்கள் குடம்புரை செருத்தலிற் சென்று முட்டும் வராலைக் கன்றெனநினைந்து விட்டளவும் பால் சொரிந்து கொண்டே செல்லும்.

40. தடாகங்கள் பங்கயத்தை வதனமாகவும், பாசியைக் கூந்தலாகவும், புள்ளொலியைச் செப்பலாகவும், சங்கினைக் களமதாகவும், திரைகளைத் தூசாகவுங் கொண்ட மங்கைமார்போற் காணப்படும்.

41. பொய்கைகள் இடையிடையே விரவிப் பூத்திருக்கும் செந்தாமரை மலராலும் நீலோற்பலமலராலும், அவற்றில் வசிக்கும் அரவங்களாலும், மாந்தர்கள் தம் மாசு நீங்கத் திளைத்துத் தூய்மை பெறலாலும், தண்ணீரருந்த வரும் வெண்ணிற விடையாலும், பார்வதி சமேத பரமசிவனை யொக்கும்.

42. அருந்துவார்க்கு அமுதம்போற் குளிர்ந்து அணிணித் திருத்தலால் அவ்வாவிகள் திருப்பாற்கடலை யொக்கும். அவற்றில் வசிக்கும் அரவக்கூட்டம் ஆயிரம் பணாமுடிகளையுடைய ஆதிசேடனை யொக்கும். பச்சைப் பசேசென்று படர்ந்திருக்கும் பங்கயப்பாசடை அவ்வாதிசேடன்மீது அறிதுயில் கொள்ளும் பசுந்துழா யணிந்த பச்சை மணிவண்ணப் பரந்தாமனை யொக்கும். அப்பாசடையின் இடையிற் பூத்திருக்கும் செந்தாமரை மலர் அவர் மருமத்தில் வீற்றிருக்கும் திருமகளை யொக்கும். அங்கு வசிக்குஞ் சங்குகள் அவர்

திருக்காத்திலுள்ள பாஞ்ச சந்நியத்தை யொக்கும். அதி லுள்ள மச்சமும் கச்சபமும் அவர் எடுத்த மச்ச கூர்மாவ தாரங்களை யொக்கும். பொய்கைகளைச் சூழ்ந்து பறக்கும் பருந்துகள் அவர் ஊர்ந்தருளும் கருடாழ்வானை யொக்கும்,

43. வேதியர்கள் நாற்புறத்திலுமிருந்து நீராடித் தருப் பித்து நான்மறைகளை யோதலாலும், அன்னப் பறவைகள் வந்து வசித்தலினாலும், செந்தாமரையோடு வெண்டாமரை விரவிப் பூத்திருத்தலாலும், தண்ணீர்க் கொடுபோக மனிதர் முகக்கும் கமண்டலத்தாலும், அப்பொய்கைகள் நாமக ளோடு கூடிய நான்முகக் கடவுளையுமொக்கும்.

44. கீழ்மக்களுள் சிலர் தாமும் தம் காமக்கிழத்தியரு மாகக் கூடிக் கள்ளுண்டு நீர் விளையாடலைச் செய்யும்போது, ஒருத்தி தன் நீழலை நீரிற்கண்டு தன் காதற்புருடன்வேறொரு பெண்ணுடன் கூடி நீராடுகிறான் என நினைந்து கோபித்து அவனையெட்டி யுதைப்பாள். அவன் தன் நிழலைப் பார்த்து அவள் வேறொரு புருடனுடன்கூடி நீராடுகிறாளென்று நினைத்து அவளை யெட்டியுதைப்பான். இவ்வாறு ஒருவரை யொருவர் உதைத்துக்கொண்டிருந்து குடிமயக்கம் நீங்கிய பின் இருவருங்கூடிக் குலாவிக்கொண்டு போவார்கள்.

## வயற் சிறப்பு

45. கழனிகளில் வேளாளர் செய்யும் புண்ணியம் போல் பயிர்கள் செழித்து வளரும்.

46. நெற்பயிர்கள் புரையறவுணர்ந்த புலவர்கள் யாத்த நூலினுள் பொருள் செறிந்திருப்பதுபோல் முதலில் தம்முட் கருவடங்கி யிருக்கப்பெறும். அதன்பின் அதன் கருத் துரைமானக் கதிர்கள் வெளிவரப்பெறும். அதன்பின்போலிக் கவிஞர்களின் இறுமாப்புப்போல் கதிர்கள் நிமிர்ந்து நிற்கப் பெறும். அதன்பின் அந்நூலின் உரையைப்போல் கதிர்கள்

விரியப்பெறும். அதன்பின் கற்புடைமகளிர் தங்கணவரல்லாத பிற புருடரைக் காணக் கூசித் தலைகுனிந்து நிற்பது போல் தரையை நோக்கிச் சாய்ந்திருக்கப்பெறும்.

47. வயல்களிலுள்ள நீர்மடைகளில் குரண்டங்கள் ஓடுமீனோடை வுறுமீன் வருமளவும் அசைவற நிற்றல், செய்தவ வேடம் மெய்யிற்றாங்கிக் கைதவவொழுக்கம் உள்வைத்துப் பொதிந்த தீயோர் உலகினரை வஞ்சித்தற்குச் சமயம் பார்த்திருத்தலை யுணர்த்தும்.

48. கழனிகளில் தாமரை மலரும் குவளைப்பூவும் பூத்திருத்தல், மங்கையர் நாட்டியஞ் செய்வதுபோல் அடுத்த சோலைகளில் மயில்களாடவும், அதற்கிசைய ஓரினவண்டுகள் சுருதிகூட்டுவது போல் முல்லையரும்பினிடமிருந்து முரலவும், மற்றோரினவண்டுகள் கீதமிசைப்பது போல் ரீங்காரஞ் செய்யவும், கழனியாகிய நங்கை குவளையாகிய கண்களாற் கண்டு தாமரையாகிய முகமலர்ந் திருத்தல்போற் காணப்படும்.

49. மள்ளர்கள் நெற்பயிருக்கு இடையூறாக அதனிடையிடையே முளைக்குங் களைகளைக் கருவிகளைக்கொண்டு களைதல், அறிஞர் முத்தியை நாடிச் செய்யுந் தவத்திற்கு இடையூறு செய்யும் ஐம்புலச் சேட்டைகளை, ஞானநூற் பயிற்சியாலும், அன்பர் பணியாலும் இறைவன் வழிபாட்டினாலும் ஒழித்தலை யுணர்த்தும்.

50. மள்ளர்கள் தம் வயலுக்கு வந்து பாயும் நீரில் தமக்கு வேண்டியவளவு வைத்துக்கொண்டு எஞ்சிய நீரத்தை அயலவர் புலங்களுக்குப் பாயுமாறு விடுத்தல், முதல் இடை கடையென்னும் முத்திற வள்ளல்களுள் இடைப்படு வள்ளல்களின் ஈகைக்குணத்தை யறிவிக்கும்.

51. வயல்களில் மள்ளர்கள் உழும்போது, படைச்சால் செல்லும் வழியிற்றங்கி வசிக்கும் வெள்ளிய சங்குகள் பயங்

தோடி அருகிலுள்ள வலவன் வளைகளிற் புகுதல், பழிபாவங் களுக்கஞ்சும் அறிஞர் ஊழ்வலியால் பரத்தையர் மனையுட் சேறலையொக்கும்.

52. வாய்க்கால்களில் விரைந்தோடும் நீரில் மீன்கள் எதிரேறிச் செல்லுதல், திருஞானசம்பந்தர் வைகை நதியி லிட்ட திருவேடு நீரைக் கிழித்துக்கொண்டு எதிர்முகமாய்ச் சென்றதை நினைப்பூட்டும்.

53. சேற்றில் வசிக்கும் பிள்ளைப்பூச்சிகள் எத்தனை காலஞ் சேற்றிலிருப்பினும் அவற்றின் உடம்பிற் சேறு ஒட்டாதிருத்தல், உட்டுறவு பூண்ட பெரியோர்கள் எவ்வளவு காலம் மனைவி மக்களுடன்கூடி வாழினும் பற்றற்றிருப்பர் என்பதை யறிவுறுத்தும்.

54. கரண்டங்கள் நீரோடைகளில் வசிக்கும் சேல்மீன் களை வாயினுற் கவ்விக்கொண்டு, கடைச்சியர் காணுமாறு கொண்டுபோதல், "இம்மீன்கள் நுங்கண்களுக்குத் தோற் பனவல்ல, காண்மின்" என்று காட்டுவதுபோ லிருக்கும்.

55. பெரியோர், தம் நெஞ்சகமாகிய வயலில், வஞ்சகம் என்னுங் கல்லை யகழ்ந்து போக்கி, ஊக்கம் என்னும் ஏர் கொண்டுழுது, சிவகாருணியமாகிய பாத்தி கோலி, வாய்மை யாகிய எருவையிட்டு, பத்தியாகிய ஒப்பற்ற விதையை விதைத்து, ஆர்வமாகிய நீரைப்பாய்ச்சி, காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னுங் களைகளைக் களைந்து, ஐம்புலன்களாகிய பட்டிமாடுகள் உள்ளே செல்லாத படி காத்து, சாந்தமென்னும் வேலிகோலி, ஞானமாகிய செந் நெற்பயிரை வளர்த்து அது தரும் பேரின்பப் பெரும் போகத்தை யருந்தி யின்புறுவதுபோல், வேளாளர்கள் தங் கள் வயல்களில் செந்நெற்பயிர் முதலியவற்றை விளைவித்துச் சுகமாய் வாழ்ந்திருப்பார்கள்.

# இரண்டாம் பாகம்

## பதி பசு பாசம்

உலகில் மனிதர்களாற் செய்யப்படும் சமய ஆராய்ச்சிகள் யாவும் பதி பசு பாசம் என்னும் இம்முப்பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சியுளடங்கும். இம்மூன்றும் அநாதியாகவும் நித்தியமாகவும் உள்ளபொருள்கள். இவை சமயங்கடோறும் வெவ்வேறு பெயர்களைப் பெற்றிருப்பினும், பதியெனப்படும் கடவுள் ஒருவருண்டென்பதும், பசுவெனப்படும் உயிர்களுண்டென்பதும், இவ்விரண்டினுக்கும் வேறாக பாசமெனப்படும் அறிவற்ற பொருள்களுண்டென்பதும் பொதுவாய்ப் பல சமயத்தினராலும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளாம்.

## பதியியல்

1. பதி, கடவுள், முதல்வன், இறைவன், தலைவன், பகவன், ஈசன், சிவன், திருமால், பிரமன், பரம் முதலியன பதிப்பொருளைக் குறிக்கும் சொற்களாம்.

2. பதியெனப்படுவது தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமையென்னும் எண் குணங்களோடுங் கூடிய தனிப்பரம்பொருளாம். இது பற்றியே திருவள்ளுவநாயனார் "கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் றாளை வணங்காத்தலை" என்றனர்.

3. கடவுளுக்கு இராஜசம் தாமசம் சாத்துவிகம் என்னும் உயிர்க்குரிய குணங்களில்லாமையால் அவர் குணமிலார் எனப்படுவர்.

4. அவருக்கு மேற்பட்ட பொருளின்றித் தாமே யெப்பொருட்குந் தலைவராயிருத்தலால் அவர் பதியெனப்படுவர்.

5. அவர் மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங்களையும், பிறதத்துவங்களையுங் கடந்து நிற்றலால் கடவுளெனப்படுவர்.

6. அவர் அறவாழியந்தணர்.

7. அவர் அன்பர்கள் திளைக்கும் ஆனந்த மாகடல்.

8. அவர் இன்பமுந் துன்பமுமற்ற பேரின்ப வாரிதி.

9. அவர் தம்மையுணர்ந்து புணர்ந்த மெய்ஞ் ஞானிகளுக்குப் புதிதுபுதிதாய் போகம் விளைக்கும் புணர்ப்பாளர்.

10. அவர் நாவின் வழியன்றிச் சித்தத்தகத்தே தித்தித்தூறும் தெய்வத்தேறல்.

11. அவர் நினைக்குந்தோறும் பேசுந்தோறும் எப்போதும் அனைத்தெலும் புண்ணெக வானந்தத் தேன் சொரியும் அற்புத நீரர்.

12. அவர் கற்றவர் விழுங்குங் கற்பகக்கனி ; மற்றவரறியா மாணிக்க மாமலை.

13. அவர் இன்பத்துன்பங்களின்றியே உயிர்களுக்கு இன்பமுந் துன்பமுந் தருபவர்.

14. அவர், அன்பர்க்கு அவரினுமினியர்.

15. அவர் அறுசுவையதனினும் உறுசுவையுடைத்தாய்க் காணினுங் கேட்கினுங் கருதினுங் களிதரும் அருள்பழுத்தளிந்த கருணை வான்கனி.

16. அவர் அவரை வழிபட்டு அவரருளையே கண்ணாகக்கொண்டு காணினன்றிச் சுட்டறிவினு லறியப்படாதவர். அவர் நூலுணர்வறியா நுண்ணியர்.

17. அவர் பாவிக்கும் பாவகத்திற்கும் நினைக்கும் நினைவிற்கு மெட்டாத நெறிபெற்றுயர்ந்த நெறியாளர்.

18. அவராற் சொல்லப்பட்ட வேதங்களும் அவரை யுணராமற் றடுமாறுந் தன்மையர்.

19. அவர் கற்பனை கடந்த தற்பரம் பொருள்.

20. அவர் சொல்லும் பொருளுங் கடந்த சோதித்தனிச் சுடர்.

21. அவர் மூலமு நடுவு முடிவுமிகந்து கால மூன்றை யுங் கடந்த காலகாலர்.

22. அவர் தம்மையடைந்தார் வினையைக் கரைக்கும் பரமவின்ப வெள்ளப்பெருக்கு.

23. அவர் காதலர்க்கு எய்ப்பினில் வைப்பு.

24. அவர் நிறையக் கொடுப்பினுங் குறையாச்செல்வர்.

25. அவர் தம்மை யடைந்தாரைத் தமக்காக்கித் தம்மை யவருக்குத் தரும் வள்ளல்.

26. அவர் பற்றற்றவர்க்கே வீடருளும் பரமயோகி.

27. அவரருளில் ஒரு சிறிது பெறுஞ் சிறு துரும்பும் அண்டத் தொகுதியை யாக்கி யளித்தழிக்க வல்லதாம்.

28. அவர் கருவலி தொலைக்கும் பெருமலை மருந்து.

29. அவர் தம்மை வஞ்சகமின்றித் தஞ்சமென்றடை யும் அன்பர்க்கு அஞ்சலென்றமைத்த கஞ்சமென் கரதலர்.

30. அவர் வித்தின்றியே விளைவு செய்ய வல்லவர்.

31. அவர் முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருள்; பின்னைப் புதுமைக்கும் பின்னைப் புதுமையர்.

32. அவர் முன் அண்டங்களெல்லாம் அணுக்கள் என் னும்படி பெரிதாயும், அணுக்களெல்லாம் அண்டங்கள் என் னும்படி சிறிதாயுமிருப்பவர்.

33. அவர் எல்லாப் பொருள்களுந் தம்மிடைத் தோன் றித் தம்மிடையடங்க, தாம் எதனினுந் தோன்றியெதனினு மடங்காதவர்.

34. அவர் தம் வியாபகத்தால் எல்லாமாயும் பொருட்டன்மையால் அவை யல்லவுமாயு மிருப்பவர்.

35. உயிர்க்குயிராயிருந்து அவர் அறிவிக்க எவ்வுயிரும் அறியும். அவர் இயக்க எப்பொருளும் இயங்கும்.

36. அவர் தமக்கென யாதொரு பெயரும் உருவமும் இல்லாதவராயினும், உயிர்களின் பொருட்டுப் பல பெயர்களையும் பல அருட்டிருவுருவங்களையும் உடையவர்.

37. அவர் ஆணெனவும் பெண்ணெனவும் அலியெனவுஞ் சொல்லப்படாதவராயினும், உயிர்கள் பொருட்டு அவரும் அவாருட் சத்தியுங்கூடி ஆணுகவும் பெண்ணுகவும் எவ்வுயிர்க்கும் அம்மையு மப்பனுமாகவு மிருப்பவர்.

38. அவர் அரியவற்றுளெல்லாம் அரிய பொருளாயினும், அன்பர்க்கு எளியவற்றுளெல்லாம் எளியராயிருப்பவர். அவர் தம்மை ஏதேனும் ஒரு பொருளிற் பாவித்துப் பச்சிலையிட்டுப் பூசித்தாலும் மகத்தான பலனைக் கொடுப்பவர்.

39. அவர் உயிர்கள் சிறுமையாற் செய்யுங் குற்றங்களைத் தம் பெருமையாற் பொறுப்பவர்.

40. அவர் உயிர்கள் அஞ்ஞானத்தால் தம்மை வணங்காமல் விட்டுவிட்டு நீங்கினுலும், தாம் அவைகளை விட்டு நீங்காது தொடர்ந்து சென்று, தன்னை விட்டோடும் குழந்தையின் பின்சென்று பாலூட்டி வளர்க்கும் அன்னையைப்போல் ஓயாதுபகரிக்கும் பேரருளாளர்.

41. அவர் "நலமிலர் நண்ணுர்க்கு, நண்ணினர்க்கு நல்லர்" ஆயினுஞ் சலமிலர்.

42. அவர் விருப்பும் வெறுப்பு மற்றவர்; ஆயினும் நல்வினை செய்பவர்க்கு நன்மையும் தீவினை செய்பவர்க்குத் தீமையுந் தரும் நடுவு நிலைமையுடையவர்.

43. சூரியன் தாக்கற்று நிற்கவும் அதன் கிரணங்களைத்தீண்டித் தாமரையரும்புவதும் மலர்வதும் வாடுவதும்

போல், அவர் தோய்வற விருக்க அவர் சத்தி சங்கற்பத்தால் பல கோடி யண்டங்கள் தோன்றுவதும் நிலைத்திருப்பதும் அழிவதுமாயிருக்கும்.

44. அவர் மெய்யர்க்கு மெய்யர், பொய்யர்க்குப் பொய்யர்.

45. அவர் தம்மை உண்டு என்பவர்க்குளராகவும், இல்லை யென்பவர்க்கிலராகவும் இருப்பவர்.

46. அவர் சர்வசுதந்திரர். எவ்வுயிரும் அவரடிமையாம். எப்பொருளும் அவருடைமையாம். எச்செயலும் அவருடைய செயலாம்.

47. அவர் தம்மருளையே நாடி அன்போடுருகி யகங்குழைவார் மனதையே கோயிலாக் கொண்டுறைபவர்.

48. அவர் தம் பெருமை தாமறியாத் தன்மையர்.

49. அவருக்கன்பிலார் எவ்வுயிர்க்கு மன்பிலார், தமக்கு மன்பிலார்.

50. தம்முயிர்க்கு உறுதி வேண்டுவோர், அவரை நினைந்து நினைந்துருகுக. அவர் புகழை வாயாரப் பேசிப் பேசி மகிழ்க. அவரைக் கண்குளிரக் கண்டு கண்டு களிகூர்க. கையாரக் கூப்பித் தொழுக. அவர் திருமந்திரத்தைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி யோதுக. இவ்வாறு அவரை ஐம்புலன்களாரத் தொழுவோர்க்கு அவர் தம்மைத் தருவர்.

இதனை—சிந்தனை நின்றனக்காக்கி நாயினேன்றன் கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்காக்கி, - வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன் மணிவார்த்தைக் காக்கி யைம் புலன்களார - வந்தனை யாட்கொண்டுள்ளே புகுந்த விச்சை மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத் - தந்தனை செந் தாமரைக்கா டனையமேனி தனிச்சுடரே யிரண்டுமிலித் தமிய னேற்கே—என்னுந் திருவாசகத்தா லறிக.

51. சச்சிதானந்தம், அதாவது சத்து சித்து ஆனந்தம் என்பன, அவர் திருமேனியாகும். இவை தமிழில் முறையே உண்மை அறிவு இன்பம் எனப்படும். இவற்றுள் உண்மையென்பது தோன்றுதலும் திரிதலும் கெடுதலுமின்றி யெக்காலத்தும் உள்பொருளா யிருத்தல். அறிவாவது முற்றுணர்வு. இன்பமாவது ஈறிலாப் பதங்களியாவையுங் கடந்த வரம்பிலின்பம்.

52. அவர் நிலம் முதலிய பஞ்ச பூதங்களையும் சூரியன் சந்திரன் என்னும் இருசுடர்களையும் ஆன்மாவையும் தமக்குச் சரீரமாகக் கொண்டு அவற்றின் மூலமாக உயிர்கள் தம்மை வழிபட்டுய்யச் செய்தலால் வேதம் அவரை பவன், சர்வான், உருத்திரன், பீமன், மகாதேவன், உக்கிரன், சோமன், பசுபதி என்னும் பெயர்களைப் பெற்ற அட்டமூர்த்தி யென்றழைக்கும். இது "பிரிதிவ்யோ பவ, ஆபஸ்சர்வ, அக்னேருத்ர, வாயுர்பீம, ஆகாஸஸ்ய மகாதேவ, சூரியஸ் ஸோக்ர, சந்த்ரஸ்யசோம, ஆத்மானப் பசுபதி" என்னும் வேதவசனத்தா லறியப்படும். "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி யியமானனா யெறியுங் காற்றுமாகி, அருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாசமா யட்ட மூர்த்தியாகி" என்னுந் தேவாரத்தானும் இது அறியப்படும்.

53. கடவுளைப் பிரிதிவி மயமான விக்கிரக ரூபமாகவும், திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, சிதம்பரம் ஆகிய தலங்களில், முறையே பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் பஞ்சபூத ரூபமாகவும் வணங்குவதும், கலசங்களில் நீரைவிட்டு கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களை யாவாகனஞ் செய்து வணங்குவதும், அக்கினி காரியங்களைச் செய்வதும் இக்கருத்துப்பற்றியேயாம். இவ் வுண்மையை யறியாதார் பாரத தேயத்தினர் பயிர்த்தொழிற் செய்து சீவிப்பதனால் பயிர்களுக்கு வேண்டிய மழை காற்று

சூரியன் முதலியவற்றைத் தேவர்களென்று வணங்குவா ராயினர் எனவும், இவர்கள் பல தெய்வ வணக்கக்காரர்கள் எனவும் தம் மனம்போனபடி யெல்லாம் தேச சரித்திரங் களில் எழுதிவைத்திருக்கிறார்கள்.

54. அவர் மந்திரங்களையும் தமக்குத் திருமேனியாகக் கொண்டிருப்பர். மந்திரங்கள் வேதங்களிலும் ஆகமங்களி லும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒருவன் தன்னைக் கருடனாகப் பாவித்துக் ஆதிதெய்விக கருட மந்தி ரத்தை விதிப்படி யுச்சரித்துப் பழகுதலால், கருடனுடைய சத்தி அவனிடத்திற் பதிந்து அவன் விட நிவர்த்தி செய்ய வல்லவனாகிறான். இது கருட பாவனை யெனப்படும். இப்ப டியே ஐம்புலன்களை யடக்கி மனதை யொருமுகப்படுத்தித் தம்மைச் சிவமாகப் பாவித்து விதிப்படிச் சிவ மூலமந்தி ரத்தை யுச்சரித்துப் பழகுவோர், சிவமாந்தன்மையடைவர். இது சிவோகம்பாவனை யெனப்படும். மந்திரங்களை விதிப் படி யுச்சரித்துப் பிரதிட்டிக்கப்பட்டும் பூசிக்கப்பட்டும் வரும் விக்கிரகங்கள் கடவுளின் சாந்நித்தியம் பெற்றுத் தம்மை வணங்குவோர்க்கு போக மோட்சங்களைத் தரும். ஆதலால் வேதாகம விதிப்படி தீக்கை செய்யப்பெற்று மந்திரங்களை விதிப்படி யுச்சரித்து, நித்திய கன்மாநுட்டானங்களை நியம மாக அநுட்டிப்பவர்களே கோயில்களில் விக்கிரகங்களைப் பரி சித்தற்கும் பூசித்தற்கும் அருகராவர்.

"நமசிவய" என்னும் பஞ்சாக்கர மந்திரத்தில், நகரம் இறைவன் திருவடியாகவும், மகரம் உதரமாகவும், சிகரம் தோளாகவும், வகரம் முகமாகவும், யகரம் முடி யாகவும் இருத்தலைக் குருமுகமாக வுணர்ந்து, அன்போடு உள்ளமுருகி யுச்சரித்துப் பழகுவோர், தம்முள்ளத்தில் இறைவர் திருவுருவம் பதியப்பெற்று, அவர் தம்முள்ளத் தைக் கோயிலாகக் கொண்டெழுந்தருளியிருக்கவும் பெறுவர்.

"சிவயநம" என்னும் இம்மகாமந்திரத்தில், சி என்பது சிவமாகவும், வ என்பது அருளாகவும், ய என்பது ஆன்மாவாகவும், ந என்பது திரோதம் என்னுஞ் சத்தியாகவும், ம என்பது மலமாகவும் இருத்தலைக் குருமுகமாக உணர்ந்து, அன்போடகங் குழைந்து உச்சரித்துப் பழகவல்லார் ஆணவ மல பந்தத்தினின்றும் நீங்கிச் சிவபரம் பொருளோடு இரண்டறக்கூடி யின்புற்றிருப்பர்.

இவ்வாறே அட்டாக்கர மகா மந்திரத்தின் பொருளைக் குருமுகமாக வறிந்து, சிந்தை நைந்துருகி யுச்சரித்துப் பழகுவோர் வைகுந்த பதவியை யடைந்து திருமாலின் திவ்விய சரணாரவிந்தத் தேனைப் பருகி நீங்காத செல்வம் நிறைந்திருக்கப்பெறுவர்.

## பசுவியல்

பசு, ஆன்மா, உயிர் முதலியன ஒரு பொருட் சொற்கள். உயிர் பாசத்தாற் பிணிப்புண்டிருத்தலால் பசு எனவும், ஆணவம் என்னும் மலத்தாற் கட்டுண்டிருத்தலால் அணுவெனவுஞ் சொல்லப்படும்.

உயிர்கள் கடவுளைப் போலவே தோற்றமும் ஈறுமின்றி எக்காலத்தும் இருப்பன. இவைகள் எக்காலத்தும் அளவில்லாதன. ஆதலால் கடவுள் இவைகள் பொருட்டுச் செய்யும் ஐந்தொழில்களுக்கும் ஓய்வில்லை; இவ்வைந் தொழில்கள் இறைவன் இயற்றும் கூத்து எனப்படுதலால் "அந்தியும் பகலுமாட வடியிணை அலசுங் கொல்லோ" என்று திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்தனர்.

நெருப்பு தனித்திராமல் ஏதேனும் ஒரு பொருளைப் பற்றியிருப்பதுபோல், ஆன்மா எக்காலத்தும் தனித்திராமல் பெத்தத்தில் பாசத் தோடுங்கூடிப் பசுவாகவும், முத்தி

யில் பரத்தோடுகூடிப் பரமாகவும் இருக்கும். ஆதலால் உயிர் சத்தோடு கூடியபோது சத்தாகவும் அசத்தோடுகூடிய போது அசத்தாகவும், இவ்வாறு சார்ந்ததன் வண்ணமா யிருக்கும் சதசத்து எனப்படும்.

செம்பு உள்ளபோதே அதனோடு களிம்பும், நெல் உள்ளபோதே அதனோடு உமியுந் தவிடும் விரவியிருப்பது போல், ஆன்மா என்று உண்டோ அது முதலாகவே அத னோடு ஆணவம் என்னும் மலம் விரவியிருக்கும். அதனால் ஆன்மா மெழுக்குண்டையில் மறைந்திருக்கும் மாணிக்கம் போல் அஞ்ஞானமாகிய அந்தகாரத்தி லழுந்தித் தன் அறி வும் இச்சையும் ஆற்றலும் வியாபரிக்கப் பெறுமல் துயரி லாழ்ந்திருக்கும். அதனை யுணர்ந்த கடவுள் அவைகள் அஞ் ஞானத்தினின்றும் நீங்கித் தம்மைப்போல் பேரறிவு பேராற்றல் முதலிய எண்குணங்களைப் பெற்று இன்புற் றிருக்குமாறு இருட்டிற் கிடந்து தவிப்பார்க்கு விளக்கு கொடுப்பதுபோல் அவைகளுக்குப் பல சரீரங்களைக் கொடுப் பர். அதனால் ஆன்மாக்கள் ஓரறிவுயிர்களாகவும், ஈரறி வுயிர்களாகவும், மூவறிவுயிர்களாகவும், நாலறிவுயிர்களாக வும், ஐயறிவுயிர்களாகவும் பிறந்து படிப்படியாய் அறிவு விள்ங்கப் பெற்று மனிதப் பிறவியை யெடுக்கும். இது பற் றியே மாணிக்கவாசக சுவாமிகள் " புல்லாகிப் பூடாய்ப் புழு வாய் மரமாகிப் - பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் - கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் - வல்லசுரராய் முனிவராய்த் தேவராய்ச் - செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள் - எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம் பெருமான் " என்றருளிச் செய்தனர்.

மனிதப் பிறவியில் நல்வினை செய்யும் உயிர்கள் மேன் மேலும் படிப்படியாயுயர்ந்த தெய்வப் பிறவிகளை யெடுத்து அணுவணுவாய் ஆணவமலத்தின் வலியடங்கப் பெற்றுக்

கடைசியில் எண்குணங்களோடுங் கூடிய கடவுள் மயமா யிருந்துவிடும்.

சொர்க்காதி போகங்களை விரும்பித் தவஞ் செய்வோர் இறந்தபின் அப்பதவிகளை யடைந்து இன்பம் நுகர்ந்து ஆணவமலம் நீங்கும் வரையில் பிறவிகளெடுப்பர்.

பாவம் செய்யும் உயிர்கள் நரகத்துன்பமும் பலவகைப் பட்ட பிறவித்துன்பமும் அடையும். இதனை "வஞ்சநமன் வேதனைக்கும் வன்பிறவி வாதனைக்கும் - அஞ்சியுனையா னடைந்தே னையா பராபரமே" என்னும் தாயுமான சுவாமிகள் திருவாக்கால் அறிக.

உயிர்கள் மனிதப்பிறவியிலேயே கடவுள் வழிபாட்டின் முதிர்ச்சியாலும், அன்பர் பணியாலும், ஞான நூலாராய்ச்சியாலும் நித்தியாநித்திய விவேகம்பெற்று இம்மை மறுமைப் பயன்களில் ஆசையற்று, மலபரிபாகம் பெறுதலும் உண்டு. அப்போது கடவுள், சூரியன் தன் கிரணங்களைத் தீண்டி யரும்பிய தாமரையை ஆயிரமிதழ் விரித்து மலரச் செய்வதுபோல் ஞானசிரியனாய் வெளிப்பட்டுத் தோன்றி, ஞான தீக்கை செய்து, அவ்வுயிர்களின் ஆணவமல வலியை முற்றிலும் ஒழித்து அவை தம்முடன் இரண்டறக்கூடி இன்புறச் செய்வர்.

## பாச வியல்

பாசம், ஆணவம் மாயை கன்மம் என மூவகைப்படும். இவை மும்மலங்களென்று சொல்லப்படும்

### ஆணவம்

ஆணவமலம், செம்பு உள்ளபோதே அதனோடு களிம்பும் இருப்பதுபோலவும், நெல் உள்ளபோதே அதனோடு உமியுந் தவிடு மிருப்பதுபோலவும், ஆன்மா என்று உண்டோ

அது முதலாகவே அதனோடு விரவியிருந்து அதன் அறிவு இச்சை செயல்கள் வியாபரிக்காதபடி தடுத்துக் கொண்டிருக்கும். அதனால் ஆன்மா அணுத்தன்மையை யடைந்து அணுவென்னும் பெயர் பெற்றது.

ஆணவம் இருளைப்போல் ஏகமாயிருந்தும், ஆன்மாக்க டோறும் வெவ்வேறு சத்திகளையுடையதா யிருக்கும்.

ஆணவமலத்தின் குணங்கள் காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாச்சரியம் அராகம் அறியாமை என்னும் எட்டுமாம்.

மனிதர்கள் கல்வி கேள்விகளில் மிகவும் மேம்பட்டு, உலக வாழ்க்கை பொய்யும் அநித்தியமும் துக்ககரமாகவும் இருப்பதறிந்தும் இவ்வுலக வாழ்க்கையிலே மிகவும் மோகங் கொண்டு மயங்கிக் கிடத்தல் ஆணவமலத்தின் சேர்க்கை யாலேயேயாம்.

இதனை,

தலைப்படு சால்பினுக் குந்தள ரேன்சித்தம் பித்தனென்று
மலைத்தறி வாரிலை யாரையுந் தேற்றுவ னெத்துணையும்
கலைச்சிறு திங்கள் மிலைத்தசிற் றம்பல வன்கயிலை
மலைச்சிறு மான்விழி யாலழி வுற்று மயங்கினனே

என்னுந் திருக்கோவையாராலறிக.

உயிர்களை ஆணவமலம் ஒரு பக்கமிருந்து தன்பால் இழுக்கும்; மற்றொரு பக்கத்தில் இறைவன் திருவருள் இருந்து தன் பக்கல் இழுக்கும். கடவுளுக்கிருப்பது போலவே உயிர்களுக்கும் அறிவு இச்சை செயல்கள் உண்டு. ஆதலால் மனிதர்கள் ஆணவமலத்தின் மேலாவது கடவுள் மேலாவது பழிபோட்டு வாளா விராமலும், ஆணவமலத்

தோடு ஒத்துச்செல்லாமலும், கடவுளோடு ஒத்துச்சென்று அவர் திருவருளைக்கூடும் வண்ணம் முயலுதல் வேண்டும். இவ்வாறு முயலுதலே கடவுள் வழிபாடு என்னப்படும்.

ஈசுரபக்தி, அன்பர்பணி, ஞான நூலாராய்ச்சி, சீவ காருண்யம், ஈகை, தானம் தபம் தருமம் முதலிய சற் கருமங்களெல்லாம் கடவுள் வழிபாட்டிற்குரிய அங்கங் களாம்.

மனிதர்கள் தம் கண்களில் படலம் தோன்றி கண்தெரி யாமலிருந்தால், கண் வைத்தியனைத் தேடிச்சென்று அப்பட லத்தைப் போக்கிக் கொள்வதுபோல், மனிதர்கள் ஞானாசிரி யனைத் தேடிச்சென்று ஆணவமான படலத்தைப் போக்க முயலுதல் வேண்டும்.

ஒரு பெண் வயது வந்து பக்குவப்பட்டிருந்தால் அவ ளைக்கூடி யின்பந்தர ஒரு புருஷன் வருவதுபோல், உயிர்கள் சரியை கிரியை யோகம் என்னும் மார்க்கங்களை யநுட்டித்து அதனால் மலபரிபாகம் பெற்றிருந்தால் இறைவன் ஞானாசிரிய னாய் வெளிப்பட்டு வந்து அருள் செய்வன்.

## மாயை

“ மாயா ” என்னும் வடமொழியில் “ மா ” என்பது ஒடுங்குதல் எனவும் “ யா ” என்பது வருதல் எனவும் பொருள்படும். உலகமாகிய சடப்பொருள் மாயாமயமாய் மாயையினின்றுந் தோன்றி மாயையில் ஒடுங்குதலால் மாயை எனப்படும்.

பெரிய ஆலமரம் சிறிய விதையினின்றும் தோன்று வதுபோல் அதிசூக்குமமாகிய Matter எனப்படும் மாயையினின்றும் பல கோடி அண்டங்கள் தோன்றும்.

(தொடரும்)